# விடுதலைப்புலிகள்

குரல் : 34 கார்த்திகை 1992 அன்பளிப்பு : ரூபா 5.00

# மாவீரரின் தியாகத்தில் தமிழீழத் தேசியம் உருவாகிறது

## மாவீரர் நாள் செய்தியில் தலைவர் வே. பிரபாகரன்

" மாவீரர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது''. இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுத்த மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

''உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என, நான் பெருமிதத்துடன் கூறுவேன்'' என்று, அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். தலைவர் விடுத்த செய்தியின் முழுவிபரம் வருமாறு:



**எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!**

இன்று மாவீரர் தினம்.

எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற வீரகாவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னதமானவர்களை, நாம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் புனித நாள்.

மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தாம் தழுவிக் கொண்ட இலட்சியத்தைத் தமது உயிரிலும் மேலாக நேசித்தவர்கள். மக்களின் விடுதலையைத் தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக்கொண்டவர்கள்; அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.

மனித வாழ்வில் சுதந்திரம் உன்னதமானது ;மனித நற்பண்புகளில் தலைசிறந்தது; மனித வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது. சுதந்திரம்தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது; முழுமையைக் கொடுக்கிறது.

மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திர தாகம் பிறக்கிறது.

நாகரீகம் தோன்றிய காலந் தொட்டு, யுகம் யுகமாக மனித குலம் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறது. அடிமைத் தளைகளிலிருந்து, அடக்கு முறையிலிருந்து விடுதலை பெற விழைந்து வருகிறது. காலம் காலமாக இந்தப் பூமியில் நிகழ்ந்த போராட்டங்கள், புரட்சிகள், யுத்தங்கள் எல்லாம் மனித விடுதலை எழுச்சியின் வெளிப்பாடுகளன்றி வேறொன்றுமல்ல.

மனிதனை மனிதன் அடிமை கொள்கிறான்; அழிக்க முயல்கிறான்; மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கிறான். அன்று தொட்டு இன்றுவரை மனிதனே மனிதனின் முதன்மையான எதிரியாக விளங்கி வருகிறான். ஒருவனது சுதந்திரத்தை இன்னொருவன் விழுங்கிவிட எத்தனிக்கும்போது, தர்மம் செத்துவிடுகிறது; உலகில் அதர்மமும் அநீதியும் பிறக்கிறது. சாதி என்றும், வர்க்கம் என்றும், இனம் என்றும் பிளவுகள் எழுந்து மனிதரிடையே முரண்பாடு தோன்றுகிறது; மோதல்கள்வெடிக்கின்றன. இந்த உலகில் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும்வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதி. ஏனெனில் சுதந்திர எழுச்சியின் உந்துதலால்தான் மனித வரலாற்றுச் சக்கரமும் சுழல்கிறது.

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம்வேண்டிப் போராடி வருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போர்க்குரல், இன்று உலகரங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப் போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களைவிட சாராம்சத்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது; ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது.

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என, நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது மாவீரர்களின் இந்த ஒப்பற்ற சாதனைகளால், ஒடுக்கப்படும் உலகிற்கு எமது போராட்டம் ஒரு உந்து சக்தியாக, ஒரு முன்னுதாரணமாக, ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது. சாவுக்கு அஞ்சாத அவர்களது துணிவும் உறுதிப்பாடுமே எமது போராட்டத்தின் பலமும் வளமுமாகும். எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் பணத்தையும் வாரி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கைநீட்டி நிற்கவில்லை; எவரிடமும் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில், எமது சொந்தக் கால்களில் தங்கி நிற்கிறோம். எமது சொந்தக் கைகளால் போராடுகிறோம். இதுவே எமது தனித்துவத்தின் தனிச் சிறப்பாகும். எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்கமுடிகிறது.

புதிய சவால்களும், புதிய நெருக்கடிகளும் நிறைந்ததாக இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

# விடுதலைப் போரின் புதிய பரிமாணம்

இராட்சத பலம்கொண்ட பலாலி தளத்தின் கிழக்குப் பகுதிமீது புலிவீரர்கள் தொடுத்த வெற்றிகரமானதொரு பெருந் தாக்குதல், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு புதிய பரிமாணத்தை, உலகிற்குத் துலாம்பரமாகக் காட்டிநிற்கின்றது.

புலிகளது இராணுவ வல்லமையின் ஒரு படிநிலை வளர்ச்சியை, புலிகள் பெற்று வரும் போர் ஆற்றலின் ஒரு உயர்ந்த கட்டத்தை, இப்பெருந்தாக்குதல் எடுத்துக்காட்டுகின்றது.

பிரமாண்டமான அளவில் ஆள் - ஆயுத பலத்தைக் கொண்டு விளங்கியபடி, யாழ். குடாநாட்டுமக்களைச் சதா அச்சுறுத்திக்கொண்டிருந்த பலாலி பெருந்தளத்தின் கிழக்குப்பகுதி, 23. 11. 1992 நள்ளிரவு புலிகளின் பாய்ச்சலுக்கு உள்ளானது.

விளைவு, ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; சக்திவாய்ந்த இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையில் இராணுவத்தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

சுமார் 4½ கி. மீ. நீளத்தில் அமைந்திருந்த - 150 இற்கும் மேற்பட்ட-பலம்வாய்ந்ததொடர் காவல்அரண்களையும், கண்ணிவெடி வயல்களையும், தற்காப்பு அரண்களையும்கொண்ட அப்பகுதிமீது, துணிகரமான முறையில் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல், சிங்களப் படையினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

யாழ். குடாநாட்டின் மையப் பகுதிக்குள் எப்பொழுது சிங்களப் படைகள் புகும் என, சிங்கள தேசம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால், புலிகள்பெரும்படைகொண்டுபலாலி இராணுவ தளத்தின் ஒரு பகுதிக்குள்வெற்றிகரமாகப்புகுந்து- தாக்கிஇராணுவத்திற்குப் பெரிய இழப்புகளைக்கொடுத்து, பெருந்தொகையில் ஆயுதங்களையும் கைப்பற்றிச் சென்றனர் என்ற செய்தி, அவர்களைத் திடுக்கிடச்செய்துள்ளது.

இத்தகையதொரு பெருந் தாக்குதலை - அதுவும் பெரும்பலம் கொண்ட பலாலித்-தளம் மீது தொடுத்து - வெற்றிகரமாக முடிப்பதென்பது, சாதாரண விடயமல்ல.

இத்தாக்குதலின் தன்மையை- அதன் இராணுவப் பரிமாணங்களை - எதிரி நன்கறிவான்.

இதனைத் தாக்குதல் என்று சொல்வதைவிட, ஒரு இரவின் சிலமணிநேரத்துள் நடந்து முடிந்த சமர் (*Battle*) என்று சொல்லலாம்.

''மிகக் குறுகிய நேரம் நடந்த மிகக் கொடிய யுத்தம்'' என, ஒரு சிங்கள இராணுவ அதிகாரி இப்பெருந்தாக்குதலைப் பற்றிக் கூறியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி, இத்தாக்குதலின் தன்மையைச் சுட்டிக் காட்டுகின்றது.

ஆயிரத்திற்கு மேற்பட்ட புலிவீரர்களை உள்ளடக்கிய பல படையணிகள், இத்தாக்குதலில் பங்கேற்றிருந்தன

4½ கி. மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டிருந்த தொடர் காவலரண்களில், நவீன ஆயுதங்களுடன் காவல் புரியும் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் -

அக்காவல் அரண்களுக்கு முன்னால் பனையளவு உயரத்திற்கு அமைக்கப்பட்டிருந்த மண் அணைகள் -

உட்பகுதியின் நடமாட்டங்களை வெளியிலிருந்து அவதானிக்கமுடியாதவாறு அமைக்கப்பட்ட தகர வேலிகள், மற்றும் முட்கம்பிகள் -

இவற்றிற்கு முன்னால் உள்ள பகுதிகளில் விதைக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான மிதிவெடிகள், கிளைமோர் கண்ணிகள் -

இப்பகுதிகளைக் குறிவைத்த வண்ணம் தளத்தின் உட்பகுதியில் பாதுகாப்பான இடங்களில் இருக்கும், நூற்றுக்கணக்கான எறிகணை செலுத்திகளிலிருந்து ஏவப்படத் தயாராக இருக்கும் ஆயிரக்கணக்கான எறிகணைகள் -

பலாலி தளத்தின் உள்ளேயே தரித்து நிற்கும் உலங்குவானூர்திகள், குண்டுவீச்சு விமானங்கள் மற்றும் டாங்கிகள், கவசவாகனங்கள் -

இவற்றையெல்லாம் ஒரே சமயத்தில் எதிர்கொண்டு கடந்து - இப்பகுதிக் காவலரண்கள் முழுவதையும் கைப்பற்றி, இராணுவத்தினரையும் பின்நோக்கி விரட்டி, இராணுவத் தளபாடங்களையும் சேகரித்து, வீரச்சாவடைந்த போராளிகளது உடல்களையும், காயமடைந்த போராளிகளையும் மீட்டுக்கொண்டு வருவது என்பது, மிகமிகக் கடுமையான ஒரு இராணுவ சாதனை என்றே சொல்ல வேண்டும்.

புலிவீரர்கள் படைத்த இந்த இராணுவ சாதனையானது, சிங்கள அரசு வரைந்து வைத்திருந்த இராணுவத் திட்டங்களை மறுபரிசீலனை செய்ய நிர்ப்பந்தித்துள்ளது.

சிங்களப் படைத்துறைத்தலைமையானது கைவசம் இரண்டு பாரிய இராணுவத் திட்டங்களை வைத்திருக்கின்றது.

ஒன்று, யாழ். குடாநாடு மீதான படையெடுப்பு.

இரண்டு, தென்தமிழீழத்தை சிங்களப் படைகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது.

இந்த இரண்டு இராணுவத் திட்டங்களுள் எதற்கு முன்னுரிமை கொடுத்து முதலில் மேற்கொள்வது என்பதில், படைத்துறைத் தலைமைப்பீடத்தில் முரண்பாடுகளும் - குழப்பங்களும் உள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் பலாலித் தளத்தின் கிழக்குப் பகுதிமீது நடந்த வெற்றிகரமான பெருந்தாக்குதல், யாழ்ப்பாணக் குடாநாடு மீதான படையெடுப்புத் திட்டத்தைச்சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

படையெடுப்பிற்கான முன்னேற்பாடுகளில் சிங்கள இராணுவம் மூழ்கியிருக்கும் போதெல்லாம், நாங்கள் முந்திக்கொண்டு அதன்மீது பெருந்தாக்குதல்களை நடாத்துவதன் மூலம், சிங்களப் படைகளின் படையெடுப்புத் திட்டங்களை முறியடித்து வருகின்றோம்.

யாழ். குடாநாட்டின்மீது ஒரு படையெடுப்பை நடாத்த சிங்கள இராணுவம் முன்னேற்பாடுகளில் ஈடுபட்டிருந்த இந்த வேளையில் நாம் நடாத்திய இப்பெருந்தாக்குதல், சிங்கள இராணுவத்தின் படையெடுப்புத் திட்டத்தைச் சீர்குலைத்துள்ளது.

இதேசமயம், தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதைக் கைவிட்டு, இராணுவத் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்த சிறீலங்கா அரசு, இப்பெருந்தாக்குதலின் பின்னர், புலிகளை இராணுவ ரீதியாக வெல்லமுடியாது என்ற யதார்த்த நிலைப்பாட்டை ஏற்க, நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் பலாலி தளத்தின் ஒருபகுதிமீது நடாத்தப்பட்ட இப்பெருந்தாக்குதல், எமது விடுதலைப்போரில், ஒரு வரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. ✻

# விடுதலைக்கு விறகான

இந்தியர்களும், இந்தியக்கூலிகளும் அம்மாவின் வீட்டிற்குள் அடிக்கடி பாய்வார்கள் - நெடுமாறனையும், அவன் சகோதரர்களையும் தேடி......

நெடுமாறன் அம்மாவின் ஏழாவது பிள்ளை; அவன்தான் கடைசி.

''நெடுமாறன் இங்க வாறதில்லையா...... நேற்று வந்து எங்கட ஒரு ஆளையும் போட்டிட்டான்.......''

''அம்மாவில அன்பிருந்தா மோன் அடிக்கடி வீட்டை வருவான் தானே......''

அம்மாவையும், அக்காவையும் அவர்கள் அடிக்கடி வந்து உறுக்கிப் பார்ப்பார்கள், அப்போதெல்லாம் அக்கா அவர்களுக்குச் சூடாகவே பதில் சொல்லி அனுப்புவாள். இது அம்மா கொடுத்து வளர்த்த உறுதி-துணிவு. ஆனால், அம்மா அமைதியானவள்-எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு பேசாமலிருப்பாள். அவளது மனம் புழுங்கிக்கொண்டிருக்கும்.

வழமைபோல அன்றும் அவர்கள் வந்தார்கள். அம்மா வாசலில் இருந்தாள். அருகில் அக்கா. வீட்டுக்குள்ளே அக்காவின் பிள்ளைகள். அவர்கள் படலையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்கள்...

''நேற்று மாவிட்டபுரத்தில உன்ர மகனைச் சுட்டுப்போட்டம். உடம்பு இருக்கு வந்து எடு......'' ஒருவன் வெற்றிக் களிப்போடு உறுமினான். தலையில் இடி விழுந்தது போல இருந்தது அம்மாவுக்கு. அக்கா அதிர்ந்து போனாள். அக்காவின் பிள்ளைகள்...... அழுது குழறினார்கள். ஊர் அழுதது. ஆனால் அம்மா மௌனமாகவே இருந்தாள். அவளால் அழ முடிவதில்லை. அவள் அழமாட்டாள்; இழப்புகளால் உறுதியான தாய்.

''எங்கட வீட்டிலதானே ஒரு ஆம்பிளையளையும் நீங்கள் இல்லாமல் செய்து போட்டியள்...... வந்தெடுக்கிறதுக்கு இங்க ஆக்கள் இல்ல......'' கண்ணீரோடு ஆனால் கடுமையாக அக்கா கூறி முடித்தபோது, அவர்கள் போய் விட்டார்கள்.

அவள் அழவில்லை. பிள்ளைகள் போராட்டத்தோடு கலந்தபோது, அவர்கள் பிணமாகத்தான் வருவார்கள் என்பதை, அம்மா தெரிந்திருந்தாள்.

* * *

*11. 08. 1984* - சுன்னாகம்.

ஊரிலிருந்த மக்களைப் பிடித்து வந்து காவல் நிலையத்தினுள் அடைத்து - வாசல் கதவுடன் வெடிகுண்டை இணைத்துவிட்டு சிங்களப் படையினர் போய்விட்டனர்.

செய்தியை அறிந்த புலிகள் மக்களை மீட்பதற்காக அங்கு விரைந்தனர், சஞ்சீவியும், நிக்கியும் இன்னும் சில தோழர்களும், வாசல் கதவிற்குப் பின்னாலிருந்த வெடிகுண்டின் அபாயத்தைத் தெரிந்திருக்காத நிலையில் உள்ளே புக முயன்றபோது அந்தத் துயரம் நிகழ்ந்தது. அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மக்களுடன், சஞ்சீவியும், நிக்கியும் வீரச்சாவை அணைத்துக்கொண்டார்கள்.

சிதைந்துபோன சஞ்சீவியின் உடலைச் சேர்த்து எடுத்து - ஒன்றாக்கி, அம்மாவிடம் கொண்டு வந்தனர் தோழர்கள். தனது செல்வங்களில் ஒன்றை அம்மா முதலில் இழந்து விட்டாள். அம்மா அழுதாள். அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன்தான் அம்மாவின் செல்லப் பிள்ளை. சஞ்சீவியின் அக்கா கதறினாள். உடன்பிறந்தவர்கள், உறவினர்கள், சுற்றத்தார், தோழர்கள் எல்லோருமே துயரைத் தாங்கிய விழிகளில் கண்ணீரோடு நின்றார்கள்.

1982, 83 காலங்களில் இயக்கத்தோடு தொடர்புகளை ஏற்படுத்தி, விடுதலைப்பணியை ஆற்றத் துவங்கினான் சஞ்சீவி.

ஒரு நாள் அம்மாவிடம் சொன்னான்: ''ஆறு ஆம்பிளையள் இருக்கிறமம்மா...... ஒரு ஆள் எண்டாலும் போராடப் போகலாம் தானே......'' என்று. அம்மா ஏற்றுக்கொள்ள முடியாமலும், ஆனால் மறுக்காமலும் சமாளித்துக்கொண்டாள்.

*83* - யூலை நிகழ்வுகளுக்குப் பின் இயக்கத்தில் முழுநேர உறுப்பினராக இணைந்து, புலிகளின் இரண்டாவது பயிற்சிப் பிரிவில் பயிற்சி பெற்றான்.


சஞ்சீவி, அம்மாவின் ஆறாவது பிள்ளை. நெடுமாறனுக்கு நேரே மூத்தவன். அண்ணனின் உடலைக் கண்டபோது, அண்ணன் மரணித்த அதே இலட்சியத்திற்காக தானும் போராடுவேன் என்ற உறுதியுடன் தான், நெடுமாறன் போராடப் புறப்பட்டான்.

இயக்கத்தின் ஆறாவது பயிற்சிப் பிரிவில் பயிற்சியை முடித்த நெடுமாறன், கடற்புலிகள் பிரிவில் சேர்க்கப்பட்டான். கடற்சண்டைகளுக்கான அடிப்படைப் பயிற்சிகளை வழங்குவதற்கென உருவாக்கப்பட்ட முதலாவது குழுவில் ஒருவனாக இருந்து - கடற்புலிகளின் முதலாவது பயிற்சிப்பிரிவில் - பயிற்சி பெற்றான். சிங்களப்படைகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் எதிரான போர்களின்போது-பலமுக்கியசமர்க்களங்களில், ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நெடுமாறன் இருந்திருக்கின்றான்.

மயிலிட்டிப் பகுதியில், இந்தியர்களும் அடிவருடிகளும் நிலைகொண்டிருந்த சுமார் பத்து முகாம்களுக்கு நடுவில், அவன் புயலாக வீசினான். இந்தியப் படையினரையும், அவர்களுக்குத் துணைபோய் தேசத்திற்குத் துரோகம் இழைத்தவர்களையும் அவனது துப்பாக்கி தண்டித்தது.

*30.08.1989* அன்று மாவிட்டபுரத்தில் நடந்த ஒரு வெற்றிகரமான தாக்குதலின்போது கப்டன் நெடுமாறன் எம்மைப் பிரிந்தான்.

* * *



''நான் உங்கட கையால சாப்பிட்டிருக்கிறனம்மா''

# ஒரு குடும்ப விருட்சம்

ஒருவர் அல்லது இருவர் போராளியாக இருக்கின்ற குடும்பங்களை நாம் பார்க்கிறோம். எமது தேசத்தின் எல்லா இடங்களிலும், இவ்வாறான குடும்பங்களை நாம் பார்க்க முடியும். ஆனால், ஒரு குடும்பமே போராளிகளாக நிற்கிற நிகழ்வுகளை, சில இடங்களில் மட்டுமே நாம் காணமுடியும். அவ்வாறான குடும்பங்களில் ஒன்றுதான் அம்மாவின் குடும்பம். அம்மா, தன் பிள்ளைகளுக்கு தாய்ப்பாலோடு வீரத்தையும், துணிவையும் ஊட்டித் தான் வளர்த்திருக்கின்றாள். தேசப் பற்றையும், விடுதலை உணர்வையும்

(10ஆம் பக்கம் பார்க்க)



**பதுமநிதி**
(சிறிதரன் சுபாஜினி)
பிறப்பு: 04. 10. 1974
வீரச்சாவு: 08. 08. 1991



**சோதி அண்ணன்**
(வைத்திலிங்கம் பரமநாதன்)
தோற்றம்: 19. 02. 1949
மறைவு: 01. 10. 1988



**சஞ்சீவி**
(வைத்திலிங்கம் மகேசநாதன்)
பிறப்பு: 01. 06. 1960
வீரச்சாவு: 11. 08. 1984



**கப்டன் நெடுமாறன்**
(வைத்திலிங்கம் கணேசநாதன்)
பிறப்பு: 17. 01. 1964
வீரச்சாவு: 30. 08. 1989

அக்கா அம்மாவின் இரண்டாவது பிள்ளை. ஆறு ஆண் சகோதரர்ளுக்கு ஒரே ஒரு பெண் பிள்ளை.

நெடுமாறனைக் கட்டிலில் படுக்கவைத்திருந்தார்கள் - அருகில் கதிரையிலிருந்து தன்வீரமகனின் உடலை அம்மா கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

# அனல்களை ஈன்ற அன்னை

ஏதிலிகள் குடியிருப்பு. சிறிய குடிசை. நிமிர்ந்தால் தலையில் இடிக்கும்.

வாசலில் மூதாட்டி ஒருத்தி நிற்கிறாளே! நில்லுங்கள்; சற்றுக் கிட்டவாகச்சென்று உற்றுப் பாருங்கள்.

கடுமையானநிறம், தளர்ந்தநடை. இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட குழந்தைகளுக்காக உழைத்துழைத்து, ஓடாய்ப்போன உடல். ஒளிநிறைந்த கண்கள். ஏதோ இனந்தெரியாத தூய்மை...... பிரகாசம்...... கையெடுத்துக் கும்பிடுங்கள்.

உண்மைதான். அவள் வணக்கத்துக்குரியவள்தான். ஏனென்றால் இந்த நாட்டின் விடியலுக்காக தன் மகவுகளில் மூவரைத் தந்த, வீரத் தாய் அவள்.

அது மன்னாரில் விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடையத் தொடங்கிய ஆரம்பநாட்கள்.

1984 ஆவணித்திங்கள், மன்னார் மூன்றாம்பிட்டியில் இராணுவ வண்டி ஒன்று சிதறியது. மன்னார் மண்ணுக்கு புலிகளின் வருகை இப்படித்தான் ஆரம்பமானது.

தாக்குதலைத் தொடர்ந்து காட்டுக்குள் மறைந்த புலிகளில், அம்மாவின் மகன்களில் ஒருவனான பீரிசும் இருந்தான். அம்மாவைப் போலவே கறுத்த நிறம். செந்தளிப்பான சிரித்தமுகம். பழகும்பொழுது எவரையும் கவர்ந்துவிடும் அமைதி.

இப்படி அந்த வீடும் போராட்டத்தின் ஒரு வடிவம்.

பரப்புக்கடந்தானில் உள்ள பாடசாலையில் மூன்றாம் தரத்துக்கு மேல் வகுப்புகள் இல்லை. மூன்றாம் தரம் அல்லது அயலூரில் உள்ள பாடசாலையில் ஐந்தாம் தரம் - அதற்குமேல் அங்கு ஒருவரும் படிப்பதில்லை. ஏனென்றால் கல்லுடைக்கும் தொழில் அவர்களுக்காகக் காத்திருக்கும்.

அம்மாவின் பிள்ளைகளும் அந்தக் கிராமத்து வாழ்க்கைக்கு உட்பட்டவர்கள்தான். ஆனால் பீரிஸ்மட்டும் எப்படியோ வேறுபட்டிருந்தான். பரப்புக்கடந்தானில் மூன்றாம். வகுப்புவரை கற்றான். அதன் பின்பு சாதாரண தரம், உயர்தரம் என நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும் சென்று படித்தான்.

பீரிசுக்கு காடும் தெரிந்திருந்தது; நகர்ப்புறங்களும் நன்றாகப் பழக்கப்பட்டிருந்தன.

மறைந்து வாழும் போராட்ட வாழ்க்கைக்கு அவனது அனுபவம் மிகவும் உதவியது.

சாறத்துடன் ஒரு தலைப்பாகையும் கட்டிக்கொண்டுவியாபாரியாக, விவசாயியாக, கூலிக்காரனாக, மன்னார் மாவட்டத்தின் கிராமங்களிற்குள் பீரிஸ் வந்துவிட்டுப் போவான். மக்கள் அவனை அடையாளம் கண்டுகொள்வார்கள். ஆனால், ஒருபோதுமே தம்மைக் கடந்து செல்லும் அந்தக் கல்லுடைக்கும் தொழிலாளியை, இராணுவத்தினர் அடையாளம்காணவே இல்லை.

'அம்மாவிற்குச் சொல்லவேண்டும். தோழர்களில் சிலர் அம்மா வீட்டுக்குச் சென்றார்கள். இதயத்தில் துயரம்படிந்திருந்தது; வாய்அடைத்துப்போயிருந்தது. இழப்புகள் எப்போதுமே கொடியவை; தாங்க முடியாதவை.

'எப்படிச் சொல்வது ......'?

மௌனமாக இருந்தார்கள். அம்மா சோகம் படிந்த முகங்களைப் புரிந்துகொண்டாள். ஆனால் ஏன்......?

''வேறபெடியளும்வருவானுகளா, எத்தனை சுண்டுஅரிசி போடுறது''?

அம்மா தட்டுத் தடுமாறிக் கேட்டாள்; அப்பா காட்டுக்கு ஓடினார்; தடுத்து நிறுத்தினார்கள்.

''அம்மா...... பீரிஸ்......'' காற்றில் துன்பம் படர்ந்தது. மன்னார் மண் அழுது ஓய்ந்தது. அம்மா ஓயவில்லை. (தன் மகனின் உடலைக்கூட அவளால் பார்க்க முடியவில்லை.) அவளால் துயரத்தைத் தாங்க முடியவில்லை.

அந்த மண்ணில் போராட்டம் துளிர்விட வீழ்ந்த ஆரம்ப விதைகளில் அவர்களும் இருவர்.

இயக்கம் வளர்ச்சி காணத் தொடங்கியது. பல நூறு இளைஞர்கள் பயிற்சிக்கு வரத் தொடங்கினர். காட்டின் விளிம்பில் நின்ற புலிகள் கிராமங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் பரவத் தொடங்கினர்.

அம்மாவின் வீடு பழையபடி இயங்கத் தொடங்கியது. அம்மா

அப்போதைய மன்னார் தளபதி விக்ரர் அண்ணா, அவனுக்கு ஒரு ஏ.கே. 47. துப்பாக்கியைக் கொடுத்தார். ''இதை நீயே வைத்துக் கொள்; கிராமத்தில் வெளிவேலை செய்பவர்களுடன் நில்'' எனச் சமாதானம் செய்துவைத்தார்.

அவன் ஆயுதத்துடன் பரிச்சயப்பட்டான். அதைக் கழற்றிப் பூட்டப் பழகினான். காலப்போக்கில் சுடவும் பழகிவிட்டான். இராணுவத்தின் அசைவுகளை வேவு பார்ப்பது அவனது வேலையாகிப்போய் விட்டது.

இப்படித்தான் ஒரு காலை நேரம். பரப்புக்கடந்தானை நோக்கி ஜீப்புகளிலும், டிரக்குகளிலும் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். பீற்றர் தனியாக நின்றான்; உதவிக்கு அருகில் எவருமே இல்லை.

அவன் செயற்பட வேண்டும்; தவறினால் எங்கள் நிலைகளுக்குள் இராணுவத்தினர் வந்துவிடுவார்கள்; எம்மில் சிலரை நாம் இழக்க வேண்டி வரும்; இழப்புகள் தாங்க முடியாதவை.

ஓடிச் சென்றான். மரம் ஒன்றின் மறைவில் நிலை எடுத்தான். முதலாவது இராணுவ வண்டி அருகில் வரும்வரை காத்திருந்தான்.

அவனது துப்பாக்கி இயங்கியது; சண்டை ஆரம்பமானது. நூற்றுக் கணக்கான எதிரிகள் தனித்த தொரு பீற்றருடன் ..... சிறிது நேரத்தில் அவன் தோழர்கள் வந்தனர்.






**2ஆவது லெப். இராசதுரை–எம்.ஜி.ஆர்.**
(மனுவல் அந்தோனிதாசன்)
பிறப்பு: 15-12-1957
வீரச்சாவு: 10-10-1988

**2ஆவது லெப். பீரிஸ்**
(மனுவல் ஞானப்பிரகாசம்)
பிறப்பு: 06-09-1960
வீரச்சாவு: 01-02-1985

**லெப். பீற்றர்**
(மனுவல் யோகராஜா)
பிறப்பு: 13-03-1964
வீரச்சாவு: 10-10-1988

பரப்புக்கடந்தானில்தான் புலிகளின் தங்ககம் இருந்தது, ஏனெனில் அது பீரிசின் இடம். வறிய கல்லுடைக்கும் மக்கள் கூட்டத்தைக் கொண்ட காட்டுப்புறக் கிராமம்.

அந்த வறிய மக்களைப் பொறுத்தவரை, புலிகள் அவர்களின் புதல்வர்கள். அப்போதெல்லாம் அம்மா வீடும் ஒரு தங்ககம் தான்.

அம்மா, அப்பா, அக்கா, அண்ணன், தம்பிகள் எவருக்குமே ஓய்விருப்பதில்லை.

நீண்ட அலைச்சலின் பின்களைத்துவிழுந்து வரும் போராளிகள், ஒரு மூலையில் சரிவார்கள். அம்மாவும் அக்காவும் சமையற்கட்டுக்கு ஓடுவார்கள். ஐயா காட்டுக்குப் போவார். இன்னும் சிறிது நேரத்தில் அவர் உடும்புடன் வருவார். சின்னண்ணன் பாண் வாங்கி வருவான். நேற்று எடுத்து சேமித்துவைத்த தேனை எடுத்துத் தருவான். சின்னத்தம்பி 'அன்பு' பால் எடுக்க ஓடுவான்.

காட்டிற்குள் முகாம் அமைப்பதற்கும், கிராமங்களில் அரசியல் வேலைகளுக்கும், இராணுவ நடவடிக்கைகளுக்கும் பீரிஸ் தேவைப்பட்டான். அவன் ஓய்வெடுப்பதில்லை; சலிப்பதும் இல்லை.

மின்னி, முழங்குவது போல் இராணுவத்தினர் மீதான தாக்குதல் முடிந்திருக்கும்; அதன்பின் அவ்விடத்தைவிட்டு நீண்டதூரம் மிக விரைவாக மாறவேண்டும். பீரிஸ் தான் வழிகாட்டி,

1.2.1985, பள்ளமடு. எமதுஅணியொன்று இடம்மாற வேண்டியிருந்தது. வழமைபோலவே பீரிசும், ஜெரால்டும் முன்னால் நடந்தார்கள்.

காட்டுமரங்களுக்குள் படுத்திருந்த இராணுவத் துப்பாக்கிகள் வெடித்தன.

பின்வாங்கி ஆளுக்காள் மாறி மீண்டும் ஒன்றாகச் சேர்ந்த பொழுது, பீரிசையும் ஜெரால்டையும் இழந்துவிட்டோம் என்பது தெரிந்தது.

வும் அக்காவும் சமைப்பார்கள். அப்பா காட்டுக்கு ஓடுவார். அண்ணன்களுக்கும் தம்பிகளுக்கும் ஓய்விருப்பதில்லை.

பீரிசுடன் சேர்ந்து வரும் பழைய முகங்களைப் பார்க்கும்பொழுது, அம்மாவின் இதயத்தில் சட்டென்று ஒரு தாக்கம் விழும்; ஆனாலும் அம்மா சமாளித்துக் கொள்வாள். அவளுக்கு எல்லாருமே பிள்ளைகள்தான்.

சின்னச் சிரிப்புடன் வேலைகளைத் தொடர்வாள். இந்நேரத்தில் பீரிசின் தம்பிகளில் ஒருவனான பீற்றர், தானும் பயிற்சிக்குச் செல்லவேண்டும் என அடம் பிடித்தான்.

பீரிசை இழந்து ஒன்றும் அதிகமான நாட்கள் செல்லவில்லை. அதற்குள் பீற்றரின் பிரிவை அம்மா தாங்குவாளா......? ''நீ இப்போதும் போராளிதான், இங்கு எங்களோடு நின்று வேலையைச் செய்'' என்றனர் தோழர்கள். அவன் கேட்பதாக இல்லை.

அதன் பின்பு, இராணுவத்தினர் அங்கு நிற்க விரும்பவில்லை. அன்று மாலை பரப்புக்கடந்தான் மகிழ்ச்சியில் துள்ளியது. பீற்றரின் வீடும் கலகலப்பாக இருந்தது. ''அவன் வீமன் மாதிரி. அவனைப் பிடிக்க ஒருதராலும் ஏலாது'' - அம்மா பெருமையுடன் சொல்லிக் கொண்டாள்.

இந்தச் சம்பவத்தின் பின்பாக பீற்றர் பயிற்சி முகாமிற்குச் சென்றுவிட்டான். பயிற்சி முடிந்த பின் தலைவரின் பாதுகாப்பு அணிக்கு, அவன் அனுப்பப்பட்டான்.

மன்னாரில் போராட்டம் வளர்ந்து விருட்சமாகி நின்றது. இராணுவத்தினர் முகாம்களிற்குள் முடக்கப்பட்டனர். வெளியில் கால் வைக்கும் படையினர் திரும்பிப் போக வழியிருக்கவில்லை.

இதனிடையே பீற்றரின் முதலாவது அண்ணனான இராசதுரையும் முழுநேரப் போராளியாக

(11ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரன் சங்கரின் பாதையில் ஒருநாள்

02-07-1982 இரவு......

''கள்ளன்......... கள்ளன்.........''

''ஓடுறாங்கள்......... பிடி பிடி.........''

''டேய்......... நில்லுங்கோடா''.

என்று கத்தியபடி, கோபங்கொண்ட பெரும் கும்பல் ஒன்று எம்மைக் கலைத்துக்கொண்டு வந்தது. இந்தச் சூழலை இரவு மேலும் பயங்கரமான தாக்கியது.

எம்மைச் சூழ கற்கள் மழைபோல் வீழ்ந்து கொண்டிருந்தன.

சங்கரும் நானும் மூச்சிரைக்க ஓடிக் கொண்டே இருந்தோம்.

* * *

05. 06. 1974 அன்று.........

கோப்பாயில், அரச வங்கி ஒன்றில் இருந்து பணத்தைப் பறிப்பதற்காகச் சிவகுமாரனும் அவருடன் இன்னும் சிலரும் சென்றிருந்தனர். அந்த முயற்சி ஏதோ காரணத்தால் குழம்பியது. சிங்களப் பொலிசாருடன் சேர்ந்து, உண்மையை உணர்ந்திராத மக்கள் கூட்டமும் சிவகுமாரனைப் பிடிப்பதற்காகக் கலைத்தது. சிவகுமாரன் ஓடி... ஓடித் தனது கிராமமான உரும்பிராய்க்கு அருகாமையில் வந்துவிட்டார். ''இனிமேல் பிரச்சினை இல்லை'' என்று சிவகுமாரன் நினைத்திருப்பார்.

ஆனால், தோட்டமொன்றினுள் மிளகாய்ச் செடிகளுள் ஒளிந்திருந்த சிவகுமாரனை விவசாயி ஒருவர், தொடர்ந்து கலைத்து வந்த சிங்களப் பொலிசாரிடம் காட்டிக்கொடுத்தார். இதன் காரணமாக ஏற்பட்ட மோதலின்போது சிவகுமாரன் சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.

இவ்வளவிற்கும், சிவகுமாரனும் அவரது தீவிர அரசியல் ஈடுபாடும் இவற்றால் அவர் இருதடவை கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததுமெல்லாம் பிரபல்யமான விடயங்கள்.

இங்கு மக்கள் சிவகுமாரனுக்கோ அல்லது அவரது தமிழீழ இலட்சியத்திற்கோ எதிரானவர்கள் அல்லர். அன்றைய காலப்பகுதியில் மக்கள் தீவிரப் போராட்ட வடிவங்களை அறிந்திருக்கவோ, அதைப்பற்றிச் சிந்திக்கவோ இல்லை. இதனால்தான் சிவகுமாரன் இறந்தார். சிவகுமாரன் இறந்த பின்னர் எல்லாப்பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கில் மக்கள் உரும்பிராயில் ஒன்று கூடினர். சிவகு:மாரனுக்குஒருதியாகிக்குரியமுறைப்படி - ஒரு மாவீரனுக்குரிய முறைப்படி - அஞ்சலியும் செய்தனர்; சிலையும் எழுப்பினர்.

* * *

சங்கர், கீழே விழுந்துகிடந்தவனை எழுந்துவிடாதவாறு சைக்கிளுடன் சேர்த்து0 தனது காலால் அழுத்திக்கொண்டிருந்தான். தனது கைத்துப்பாக்கியை எம்மைத் துரத்திவந்த கும்பலை நோக்கி நீட்டியபடி ''சுடவா'' என்று என்னிடம் கேட்டான்.

நான் கீழே கிடந்தவனைக் காலால் உதைத்துக் கெட்ட வார்த்தைகளால் ஏசினேன். இருட்டில் அவனின் முகம் எனக்குத் தெரியவில்லை.

''...மகனே...'' இனிமேலும் ஏதாவது செய்ய நினைத்தீர்களோ எல்லோரையும் சுடுவோம், எல்லோரையும் திரும்பிப்போகும்படி போய்ச் சொல்லு'' என்றேன்.

''சுட வேண்டாம்...... ஓடுவோம்'' என்று சங்கரிடம் கூறினேன். கம்பி வேலி ஒன்றினைக் கடந்து தொடர்ந்து வாழைத் தோட்டம் ஒன்றினூடாக ஓடினோம்.

''எல்லாம் வா...... எல்லாம் வா; ஒருத்தரும் போக வேண்டாம்'' என்று எமக்குப் பின்னால் ஒரே சமயத்தில் பல குரல்கள் கேட்டன.

நான் பெரிதாக மூச்சிரைத்தபடி, சங்கரின் பின்னால் சென்றுகொண்டிருந்தேன். சங்கர் என் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான். என்னால் கதைக்க முடியவில்லை. நாக்கு கீழ் வாயில் ஒட்டியமாதிரி அசைய மறுத்தது.

மேலும் ஒரு கம்பி வேலியைச் சங்கர் ஏறிக் கடந்தான். சுற்றாடலை அவதானித்தபடி என்னையும் ஏறிக் கடக்கும்படி கூறினான். என்னால் ஏற முடியவில்லை. கைகள், கால்கள் எல்லாம் நடுங்கின. நாக்குழறியது.

''என்ன சிறீயர். இந்தமாதிரிக் களைச்சுப் போனீங்கள்'' எனக் கூறியபடி சங்கர் மீண்டும் வேலியைக் கடந்து, நான் வேலியைக் கடக்க உதவினான். இப்படியாகச் சங்கரின் உதவியுடன் மேலும் நான்கைந்து தடைகளைத் தாண்டிச் சென்றேன். பின்னர் நாம் வீதியொன்றை அடைந்தோம். எம்மைச் சூழ எங்கும் கும்மிருட்டு. எல்லாத் திக்கிலும் நாய்கள் பலமாகக் குரைத்து எமக்கு மேலும் அச்சமூட்ட முயன்றன.

என்னால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ''இனிமேல் உவங்கள் கலைத்தால் சுடுவம்'' என்றேன்.

''நாம் இன்னும் கொஞ்சத் தூரத்திற்கு வளவுகளையும், வேலிகளையும் தாண்டிப் போவம். பிறகு பாதையால் போவோம். இங்கிருந்தே பாதையால் சென்றால் அவங்களைச் சந்திக்கவேண்டிவரும். வீணாகச் சுட்டுக்கொல்ல வேண்டி வந்திடும்'' என்று கூறியபடி, சங்கர் எனக்கு முன்னே சென்றான்.

* * *

1982 பங்குனி மாதத்தில் ஒரு இரவு...

எமது இயக்கத்தின் சில பொருட்களை 'ரெலோ'வினருக்குக் கொடுக்கவேண்டியிருந்தது. அந்த நாட்களில், இவ்வாறு மற்றைய குழுக்களுக்கும் நாம் உதவுவதுண்டு. இராச பாதையில் உள்ள ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அவ்விடத்தில் வந்து பொருட்களைப் பெற்றுச் செல்லும்படி அவர்களுக்குக் கூறியிருந்தோம்.

நாம் எப்போதுமே தடயங்களை விடாமல் செயற்படுபவர்கள். சிறிய - முக்கியத்துவமற்ற விடயங்கள் என்றாலும் மிகவும் இரகசியமாகவே செயற்படுவோம். உயிர் நண்பனையோ பெற்றோரையோகூட நம்பி எதையும் கதைக்க மாட்டோம். அவர்களுக்குத் தெரிய ஒரு விடயத்தைச் செய்யமாட்டோம். எமது தோழர்களுக்கே தேவையற்ற விடயங்களைச் சொல்ல மாட்டோம்; நாமும் அறிய முயலமாட்டோம். மிகவும் இரகசியமாகவே செயற்படுவோம். இதனால் நாம் எதிரியின் வலையில் சிக்குவது என்பது எப்போதுமே நடந்ததில்லை. மாறாக மற்றைய குழுக்கள் எமது நடைமுறைக்குத் தலைகீழான முறையிலேயே செயற்பட்டன. இதனால் அடிக்கடி பிடிபட்டனர். இவர்களின் பொருட்களும் ஆயுதங்களும் பிடிபட்டன. உதவிசெய்வொரும் பிடிபட்டனர். எனவேதான் தனிமையான இடத்தில் சந்தித்துப் பொருட்களைப் பெற்றுச்செல்லும்படி அவர்களுக்குக் கூறினோம்.

குறித்த நேரத்தில், குறிப்பிட்ட இடத்திற்கு ஐந்து பேர் வந்திருந்தார்கள். உண்மையில் அதற்கு இருவரே போதும். வேறு இடத்தில் பொருட்களுடன் ஒருவரை விட்டுவிட்டு, நான் மட்டும் அவர்கள் நின்ற இடத்திற்குப் போய் அவர்களில் இருவரை அழைத்துச் சென்று, பொருட்களை ஒப்படைத்தேன்.

மறுநாள் 'ஈழநாடு' பத்திரிகையில், ''நேற்றிரவு சுமார் 8.30 மணியளவில், இராசபாதையில் உள்ள தோட்டங்களில் கிழங்கு திருடவந்த மூன்றுபேர் கொண்ட கோஷ்டியொன்றை, பதுங்கியிருந்த விவசாயிகள் பிடித்து நையப்புடைத்த



எமது இயக்கத்தின் முதல் மாவீரன் லெப். சங்கர்

பின்னர், பொலிசில் ஒப்படைத்தனர். சில நாட்களாக இப்பகுதித் தோட்டங்களில் கிழங்குகள் களவாடப்பட்டு வந்ததாலேயே விவசாயிகள் தோட்டங்களில் காவல் போட்டிருந்தனர். மேலும் இதே பாதையில், இரண்டு நாட்களுக்கு முன்னர் இரவு வேளையில் வந்த தம்பதியினரைக் கத்திமுனையில் மிரட்டி, தாலிக்கொடி அறுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. பிடிபட்ட மூவரிடமும் இவ்விடயம் தொடர்பாகவும் பொலிசார் துருவித் துருவி விசாரணை செய்கின்றனர்'' என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

பிசகு நடந்த இடத்தை விளங்கிக்கொண்ட நாம் கவனமாக இருந்தோம். ரெலோவினரைச் சந்தித்து விபரம் கேட்டோம். நடந்தது இதுதான்: இவர்கள் ஐவர் அந்த இடத்திற்கு வந்ததால், மூவரை அவ்விடத்திலே விட்டுவிட்டு, இருவர் மட்டும் பொருட்களை எடுக்க என்னுடன் வந்துவிட்டனர். இந்தப் பொருட்களைச் சைக்கிளில் வைத்துக் கட்டிச் செல்வதற்காக உரபாக், கயிறு, கத்தி என்பன அந்த மூவரிடமும் இருந்தன இம்மூவரும் அவ்விடத்திலேயே தொடர்ந்து நின்றதை அவதானித்த விவசாயிகள் சந்தேகித்தனர். அவர்கள் மூவரையும் விசாரித்த போது சரியான காரணம் கூறமுடியாமல் தடுமாறியுள்ளனர். மேலும் இவர்களிடம் உரப்பாக், கயிறு, கத்தி என்பனவும் இருந்தன. விவசாயிகளின் சந்தேகம் மேலும் உறுதிப்பட்டது. இதனால் மூவரையும் பிடித்துக் கட்டியுள்ளனர். இவர்கள், தாம் இயக்கம் என்று கூறியும் விவசாயிகள் நம்பவில்லை. ''எல்லோரும் இப்ப இயக்கம் என்று சொல்லிக்கொண்டுதான் களவெடுக்கிறார்கள்'' என்று கூறி, நல்ல அடியும் போட்டு, பொலிசில் ஒப்படைத்துள்ளார்கள். மூவருக்குமே பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன என்ற நீண்ட செய்தியைத் தெரிவித்தார்கள்.

* * *

02.07.1982............

அன்று இரவு நெல்லியடியில், பொலிசார் மீதான தாக்குதல் ஒன்றைச் செய்திருந்தோம். பின்னர் அவ்விடத்தில் இருந்து விரைவாக வெளியேறுவதற்காக கார் ஒன்றைக் கடத்தி வந்தோம். மற்றைய தோழர்களையும், எடுத்த ஆயுதங்களையும் எமது மறைவிடத்திற்கு அருகாமையில் இறக்கிய் பின்னர், அந்தக் காரை வேறு இடத்தில் கைவிட்டு வருவதற்காகச் சங்கரும் நானும் சென்றோம். விசாரணைகளைத் தொடர்ந்துவரும் பொலிசார் எமது இருப்பிடத்தை அறியமுடியாது 'திசை திருப்புவதற்காகவே, நாம் காரை வேறிடத்தில் விட வேண்டியிருந்தது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்குச் சமீபமாக உள்ள சுடலை ஒன்றில் காரைக் கைவிட்டுவிட்டு, சங்கரும் நானும் வந்துகொண்டிருந்தோம். எமது பயணத்தைத் தொடருவதற்காக துர்க்கை அம்மன் கோவிலுக்கு முன்பாக ஒருவரிடம் இருந்து சைக்கிளைப் பெறமுயன்றோம். அப்பொழுது சைக்கிள் உரிமையாளன் ''கள்ளன் கள்ளன்'' என்று கத்திவிட்டான். எமது துரதிர்ஷ்டம் அந்த இரவு வேளையில் தியேட்டர் ஒன்றில் படம் பார்த்துவிட்டு வந்த பெரும் கும்பல் ஒன்று, அவ்விடத்தை நெருங்கி வந்துகொண்டிருந்தது. அந்தக் கும்பலும் அவனுடன் சேர்ந்து எம்மைக் கள்ளன் என்று பிடிக்க முயன்றது. நாம் தமிழீழ விடுதலைப் புலிகள், இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், நாம் வந்த கார் பழுதடைந்துவிட்டதால்தான் சைக்கிளைக் கேட்டதாகவும் கூறினோம். அவர்கள் நம்பவில்லை. அவர்கள் எம்மை நெருங்கினார்கள்; நாம் சுழல்துப்பாக்கியைக் காட்டிய போதும் அவர்கள் பயப்படவில்லை.

நாம் வைத்திருப்பது போலித்துப்பாக்கி என்று கருதி எம்மைப் பிடிக்க முயன்றனர். அந்த இரவில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதிவழியாக நாம் ஓடத்தொடங்கினோம். எம்மைத் துரத்திய கும்பல் ''கள்ளர்... கள்ளர்...'' எனக்கத்தியதால், வீடுகளிலிருந்தவர்களும் வீதியால் வந்தவர்களுமாகப் பெரும் கும்பலே எம்மைக் கலைத்தது. கற்களால் எறிந்தார்கள்; கைகளில் பொல்லுகளையும் எடுத்துக்கொண்டு கலைத்துவந்தார்கள்.

''இந்தக் கும்பலிட்டைப் பிடிபடக்கூடாது. பிடிபட்டால் கதையைக் கேட்காமலே எமது ஆயுதத்தைப் பிடுங்கி, அடித்து மடக்கிப் போடுங்கள், இப்படிப் பிடிபடுகிற நிலை வந்தால், சுடுவதுஎன்றாலும் சுட்டுவிட்டுத் தப்பிவிட வேண்டும்'' என்று, நான் ஓடிக்கொண்டே சங்கரிடம் கூறினேன்.

எம்மால் தொடர்ந்து ஓட முடியவில்லை. ஒருமுறை மேல் நோக்கிச் சுடும்படி சங்கரிடம் கூறினேன். சங்கர் சுட்டான். கும்பல் பயப்படவில்லை. தொடர்ந்து கலைத்தது. பின்னர் நான் சுடுகிறேன் என்று கூறி மேலும் ஒரு தடவை சுட்டேன். கும்பல் தொடர்ந்தும் கலைத்து வந்தது.

மல்லாகம் சந்தியை நெருங்கிக்கொண்டிருந்தோம். சந்திக்குப் போனால் நிலைமை இன்னும் மோசமாகும் என உணர்ந்து, சந்திக்குப் போகாமல், இருட்டில் மறைந்து ஒழுங்கைக்குள்ளால் ஓடத்தீர்மானித்தோம். இடது பக்கமுள்ள ஒரு ஒழுங்கையினூடாகத் திரும்பி ஓடினோம்.

சிறிது தூரம் ஓடியிருப்போம், ஒருவன் சைக்கிளில் விரைந்து வந்து எமக்குக் குறுக்காக சைக்கிளைவிட்டு எம்மை மறித்தான்.

சங்கர், அவனைச் சைக்கிளுடன் சேர்த்து காலால் உதைத்து வீழ்த்தினான்.

* * *

சங்கரும் நானும் தொடர்ந்து வளவுகள், தோட்டங்களின் ஊடாக வேலிகளையும் தாண்டி ஓடி, விடிவதற்கு முன்பாக எமது மறைவிடத்தைச் சென்றடைந்தோம்.

03. 07. 1982.........

காலை ஈழநாடு பத்திரிகையில் முன்பக்கச் செய்தியாக, நெல்லியடியில் பொலிசார் கொல்லப்பட்ட செய்தி வெளியாகியிருந்தது அத்துடன் அதே பத்திரிகையில், துர்க்கை அம்மன் கோவிலடியில் சைக்கிள் பறிக்க முயன்ற திருடர்களை மக்கள் மடக்கிப்பிடிக்க முற்பட்டபோது திருடர்கள் சுட்டதில், இளைஞர் ஒருவர் காயமடைந்தார் என்ற செய்தியும் பிரசுரமாகியிருந்தது.

— கோ. மகேந்திரராசா ✱

# இவர்கள் இடம்பெயர்ந்தும்

சிங்கள அரசபயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மக்களின் நலனுக்காக, 'சமூக – பொருளாதார வளர்ச்சித் திட்டம்' என்ற பெயரில், அம்மக்களின் வாழ்நிலையை மேம்படுத்த சமூக - பொருளாதார வேலைத்திட்டங்களைச் செய்துவருகின்றோம்.

இத்திட்டத்தின் மூலம், சிங்கள அரசின் நில ஆக்கிரமிப்புகளாலும் இராணுவ வன்முறைகளினாலும் பாதிப்பிற்குள்ளாகி இடம்பெயர்ந்து வந்த மக்களில் ஒரு பகுதியினர், அகதிமுகாம் வாழ்க்கையிலிருந்து நகர்ந்து குடியிருப்புத் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டு, நம்பிக்கையூட்டக்கூடிய புதிய வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

வன்னி மாவட்டத்தில் பிரதானமாக மணலாறு, கிளிநொச்சி கோட்டங்களில் இத்தகைய குடியிருப்புக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அங்கே, தென்தமிழீழத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் குடியமர்த்தப்பட்டு, உழைத்து வாழ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, தமது சொந்தக்கால்களில் நிற்கும் சூழ்நிலை உருவாக்கிக் கொடுக்கப்படுகின்றது.

இந்த சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் வேலைகளுக்குப் பொறுப்பாக திரு. சி. ரவி அவர்கள் இருந்து செயற்படுகின்றார்.

அகதி முகாம் வாழ்க்கையிலிருந்து நகர்ந்து குடியிருப்புக் கிராமங்களில் உழைத்து வாழும் வாழ்க்கை முறை, நடைமுறையில் வெற்றியளித்து வருகின்றது. இவ்வெற்றிகரமான வேலைத்திட்டத்தை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

சிங்கள அரசு எமது தேசத்தை ஆக்கிரமித்து சிதைத்துவிடக் கங்கணம் கட்டி நிற்கிறது. தமிழ் மக்கள்மீது இராணுவ வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. எமது மக்களின் பொருளாதார, சமூக வாழ்வியக்கம் சிரழிக்கப்பட்டு - சிதைக்கப்பட்டுள்ளன. இத்தகையதோர் நிலையில் தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதி வாழ்நிலைக்கு ஆளானார்கள்.

1990 ஆம் ஆண்டு போர் ஆரம்பித்த காலத்தில் தென்தமிழீழத்திலிருந்து விரட்டப்பட்ட மக்கள், பல மைல்கள் நடந்து, வட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் தஞ்சமடைந்தனர். தொடர்ந்து முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் அகதிமுகாம்களில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

அகதி முகாம் வாழ்க்கை பரிதாபகரமானது. ஒருவேளை உணவுக்கும் பலர் திண்டாடினார்கள். சுகாதாரச் சீர்கேடுகளாலும் தொற்று நோய்களாலும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள்.

சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமையும், முகாம் வாழ்க்கையும், வேலைவாய்ப்பின்மையும், வேகமாகப் பரவிய தொற்றுநோய்களும், அத்துடன் குழந்தைகள் மத்தியில் அதிகரித்த மரணவீதமும் முகாம்களில் வாழ்ந்த மக்களுடைய மனோநிலையைக் கடுமையாகப் பாதித்தன.

இந்த மக்கள், நம்பிக்கையீனமும் வேதனையும் விரக்தியும் நிறைந்த நாட்களை எண்ணிக்கொண்டு அகதி முகாம்களில் இருந்தார்கள். இதனால் தமிழீழ தேசத்தின் பொருளாதார வளங்களும், மனிதவலுக்களும் சீரழிந்துகொண்டிருந்தன.

சிங்கள இனவாத அரசும் இதனையே விரும்பியது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அதன் அனைத்து அடிப்படைகளிலும் அழித்துவிடவே, சிறீலங்கா அரசு செயற்பட்டு வருகிறது.

எமது மக்களின் மனவுறுதியைக் குலைத்து, எதிர்கால நம்பிக்கைகளைச் சிதறடித்து, தொழில் வாய்ப்புகளை அற்றுப்போக வைத்து, மக்களை அகதி முகாம்களில் முடக்கி, கப்பலில் வரும் உணவை எதிர்பார்த்து வாழும் நிலையில் தமிழ்மக்களை வைத்திருக்கவே அரசு விரும்புகிறது.

ஆனால், நீண்ட முகாம் வாழ்க்கை என்பது தற்கொலைக்கு ஒப்பானது என்பதை மக்கள் அனுபவ வாயிலாக உணர்ந்துகொண்டார்கள்; உழைத்து வாழ்வதற்காக அவர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டார்கள்.

எதிரியின் திட்டங்களைத் தகர்த்தெறிந்து இந்த மக்களுக்கு என்று ஓர் பொருளாதார அடித்தளத்தை உருவாக்கவும், வாழ்வின் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்தவும், 'சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்டம்' ஒன்று விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைய நிலையில் இத்திட்டம் மிகவும் வேகமாகவும், திறமையாகவும் நெறிப்படுத்தப்பட்டு, வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டும் வருகிறது.

இதனடிப்படையில், வறுமைக் கோட்டின்கீழ் பின்தங்கிய நிலையிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்காக கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, விவசாயம், புனர்வாழ்வு, தொழில், பொதுத் திட்டம் என்ற நிறுவன வடிவங்களை ஏற்படுத்தி, இடம்பெயர்ந்த மக்களுக்கான கொத்தணிக் கிராமங்கள் (சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்ட ஒழுங்கமைவுடன்) உருவாக்கப்பட்டன.

இக்கொத்தணிக் கிராமங்களில் சமூக - பொருளாதார நன்மைகள், பொதுவான மனிதநேய வேலைகள், பண்பாட்டுக் கோலங்களுடன் கூடிய சமூக நிலைமைகள், பொருளாதார சமூக முன்னேற்றங்கள் யாவும் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தினால் உறுதி செய்யப்படுகிறது.

அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் இக் கொத்தணிக் கிராமங்களுடன் மேலும் பல கொத்தணிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் கொத்தணிக் கிராமங்களுக்கு வெளியில், உறவினர் வீடுகளில் தங்கி வாழும் மூவாயிரத்திற்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் குடும்பங்களும், திட்ட ஒழுங்குகளுக்கேற்ப சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வருவது, குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**சமூக – பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சுமார் ஏழாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் ஒன்றிணைந்து உழைக்கிறார்கள்; இந்த மண்ணில் உரம்பெற்று, உறுதியோடு கால்பதித்து நிமிர்ந்து நிற்கிறார்கள்.**

சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சுமார் ஏழாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் ஒன்றிணைந்து உழைக்கிறார்கள்; இந்த மண்ணில் உரம்பெற்று, உறுதியோடு கால் பதித்து நிமிர்ந்து நிற்கிறார்கள்.

இம் மக்களுக்கென ஏழு பிரிவுகளாக அமைக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உறுதியான, தேசப்பற்றுள்ள சமுதாயக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டலையும் இவ் வேலைத் திட்டங்கள் தீவிரமாக மேற்கொள்கின்றன.



விடமைப்புத் திட்டமொன்றின் திறப்பு விழா.

**வேதனை நிறைந்த அகதி முகாம் வாழ்க்கை மாற்றியமைக்கப்பட்டு, குடியிருப்புத் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டு, புதிய வாழ்க்கைக்குள் மக்கள் அடியெடுத்துவைக்கிறார்கள்.**

## கல்வி

உண்மையில், இம்மக்கள் முகாம்களில் தங்கியிருந்த நாட்களில் குழந்தைகள் தமது பள்ளிப் படிப்பைக் கைவிட்டு இருந்தார்கள்.

சிறுவர்களின் வாழ்வும் மேம்பாடும் அவர்கள் வாழும் சுற்றாடலில் தங்கியுள்ளன. ஆகவே சுற்றாடலைப் பாதுகாப்பதாலும் விவேகமாகப் பயன்படுத்துவதாலும் சிறுவர்களுக்கு மிகுந்த நன்மையுண்டு. இவ்வடிப்படையில் சிறுவர்களையும் அவர்களது குடும்பங்களையும் பாதுகாத்து, அவர்களுக்கு உணவு, வைத்தியப் பராமரிப்பு, அடிப்படைத் தேவைகள் என்பன தொடர்ந்து கிடைக்க வழி செய்யப்பட்டது.

இதன் தொடராக இளம் சிறார்கள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் குடியிருப்புத் திட்டங்களில் பாலர் பாடசாலைகளும், கல்வி வளர்ச்சிக் கழகங்களும் அமைக்கப்பட்டன. இதுவரைக்கும் பல்வேறு கொத்தணிக் கிராமங்களிலும் ஐம்பதிற்கு மேற்பட்ட பாலர் பாடசாலைகளும், ஐம்பதிற்கு மேற்பட்ட கல்வி வளர்ச்சிக் கழகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்கல்வித் திட்டத்தின் கீழ் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாலர்களும், இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும், தமது கல்வியைத் தொடர்ச்சியாகவும் ஒழுங்காகவும் பெறுவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

போதனா மார்க்கங்களுக்கூடாக கூடுதலான அறிவு, ஆற்றல், ஒழுக்க நெறிகளைப் போதிக்கவும் பெண்களினதும் முதியோர்களினதும் எழுத்தறிவின்மையைப் போக்கவும், தொழிற் பயிற்சியும் தொழில்புரியத் தயாராக்குதலும் என்ற அடிப்படையில், மக்களுக்கான 'சர்வ கலா பயிற்சி' எனும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறி, தையற் பயிற்சி நெறி, சுகாதாரத் தொண்டர் பயிற்சி நெறி, கால்நடைப் பயிற்சி நெறி ஆகிய கற்கை நெறிகளை உள்ளடக்கியுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறை, இடவசதியின்மை போன்ற காரணிகளால் உயர்தரப் பாடசாலைகளில் கல்வி கற்க முடியாத நிலை, இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு ஏற்பட்டது.

இந்நிலைகளைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் புதிதாக பல ஆசிரியர்களை நியமித்து, இடவசதிக்காகத் தற்காலிகக் கொட்டகைகளும் அமைக்கப்பட்டன. இன்றுவரை ஐம்பதிற்கும் அதிகமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதோடு, ஐந்துக்கும் அதிகமான பாடசாலைகளில் தற்காலிகக் கொட்டகைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடைகளும்,

# உறுதியுடன் இருக்கிறார்கள்

உபகரணங்களும் வழங்கப்பட்டன. மேலும், பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளான கரும்பலகைகள், தளபாட வசதி ஆகியனவும் வழங்கப்பட்டன.

மேலும் இக்கல்வித் திட்டத்தின் கீழ் வசதியற்ற வறிய மாணவர்களைத் தெரிவுசெய்து, கல்வியை மேற்கொள்ளச் சகல உதவிகளும் செய்யப்படுகின்றன.

## சுகாதாரம்

சன நெருக்கடிமிக்க முகாம் குடியிருப்புக்களில் தொற்றுநோய்கள் மிகவிரைவாகப் பரவுகின்றன. வேலைவாய்ப்பின்மையும், பொருளாதாரத் தடையும், விலை ஏற்றமும் தேசத்தின் போசாக்கு நிலையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் போசாக்கின்மையின் காரணமாய் இலகுவில் நோய்வாய்ப்படுகிறார்கள். தாய் - சேய் இறப்புவீதமும் அதிகரித்துள்ளது.

இந்நிலையை மாற்றியமைக்க வேண்டிய தேவை இருக்கிறது. இதற்காக, தினசரி மக்களுக்காகச் செயலாற்றும் ‘மாவீரர் வைத்திய நிலையம்’ அமைக்கப்பட்டுள்ளது. இவ்வைத்திய நிலையத் தொண்டர்களால் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும், சூழற் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளும் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

போசாக்கின்மையை ஈடுசெய்ய கர்ப்பிணிகள், தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கான சத்துணவு, பால்மா வழங்கும் அத்தியாவசிய போசாக்குத் திட்டம் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கென இருபத்தைந்திற்கும் அதிகமான தொண்டர்கள் பயிற்றுவிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இச் சுகாதார வேலைத் திட்டத்தின்மூலம், எதிரியின் திட்டமிட்ட சுகாதார - மருத்துவச் சீர்குலைப்பு நடவடிக்கைகளிலிருந்து, இடம்பெயர்ந்த மக்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் நிலை, தோன்றி உள்ளது.

## உற்பத்தி நடவடிக்கைகள் (விவசாயம்)

சிங்கள அரசு தமிழ் மக்களின் சுய பொருளாதார உற்பத்தியைச் சீர்குலைத்து, மக்களைத் தங்கு நிலையில் - அதுவும் நிவாரண உதவிகளை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் நிலையில் - வைத்திருக்கவே விரும்புகிறது.

இதன்மூலம் உறுதியற்ற - அழிவைத் தேடிப் போகும் - சமூக அமைப்பை ஏற்படுத்த எதிரி விரும்புகின்றான்.


சிங்கள அரசின் இந்த இன அழிப்பு நடவடிக்கையின் ஆபத்தை உணர்ந்து, சுயஉற்பத்தியின் தேவையைக் கருத்திற்கொண்டு, சமூக- பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உற்பத்தித் திட்டங்கள் இடம்பெயர்ந்த மக்களுக்காக முன்வைக்கப்பட்டன.

உற்பத்தித் திட்டத்தின் கீழ் இம் மக்களின் முயற்சிக்கான உதவிகள் யாவும், மீளப்பெறும் கடனாகவே வழங்கப்படுகின்றன; மானியமாக வழங்கப்படவில்லை.

இதனடிப்படையில் இன்றுவரை ஐந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நெற்செய்கைக்கான உதவிகளும், 1500இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மேட்டுப்பயிர் - சிறு தானியப் பயிர்ச்செய்கைக்கான உதவிகளும், நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தோட்டப் பயிர்ச் செய்கைக்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் கொத்தணிக் கிராமத்து மக்களின் கூட்டுழைப்பிற்கான ‘கூட்டுப் பண்ணைத் திட்டங்களும்’ அறிமுகப்படுத்தப்பட்டன. இம் மக்கள் பண்ணைகள் உடையார்கட்டு, முத்தையன்கட்டு பகுதிகளில் செயற்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் புதிய புதிய வாழ்வைப் பெற்று வருகின்றன;

இந்த வகையில் உடையார்கட்டுக் குளத்திலிருந்து பிறப்பெடுக்கும் மூங்கிலாறுக்குக் குறுக்காக, இடம்பெயர்ந்த மக்களின் கூட்டுழைப்பினால் அணைக்கட்டொன்று அமைக்கப்பட்டது வியக்கத்தக்கதொரு சாதனையாகும். இதன் மூலம் வெறும் பாலைவனமாய் இருந்த 80 ஏக்கர் நிலம், இரண்டு போகம் பயிர்செய்யக்கூடிய பசுந்தரையாக மாற்றப்பட்டது. சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் செலவிற்குள், அண்ணளவாக 15 இலட்சம் ரூபா பெறுமதியான நன்மையை, இத்திட்டத்தின்மூலம் இந்த இடம்பெயர்ந்த மக்கள் பெற்றுள்ளனர்.



சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் திரு. சி. ரவி.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூங்கிலாறு, பிரமந்தனாறு, உடையார்கட்டு, வள்ளிபுரம், சுதந்திரபுரம், தேசிபுரம், கைவேலி, பொக்கணை, கேப்பாபிலவு, முத்தையன்கட்டு, கெருடமடு போன்ற இடங்களில் சுமார் 1540 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து, சுயதொழில்வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, தென்தமிழீழத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் வந்து தங்கியுள்ள மக்களுக்கு நவாலி, அரியாலை, கைதடி, மட்டுவில், நாகர்கோவில், செம்பியன் பற்று, தும்பளை, மானிப்பாய் ஆகிய ஊர்களில் சுமார் 350 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து உழைத்து வாழ வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

இதேசமயம், முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த சிங்கள இராணுவப் படையெடுப்புகள் காரணமாக இடம்பெயர்ந்த முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு மாத்தளன், இடைக்காடு, பொக்கணை, வலையர்மடம், பனையடி, முள்ளிவாய்க்கால், மந்துவில், புதுக்குடியிருப்பு, சிவநகர், இரணைப்பாலை, புதுப்பிலவு, கெருடமடு, ஒட்டிசுட்டான் ஆகிய இடங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு ஸ்கந்தபுரம், புளியம்பொக்கணை, கோணாவில், 10ஆம் கட்டை ஆகிய இடங்களில் சுமார் 432 வீடுகள் அமைத்து உழைத்து வாழ வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புத் தொகுதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாவீரனது பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்படுகின்றது.

## சுய தொழில் வாய்ப்பு

இடம்பெயர்ந்து தொழில் வாய்ப்பற்றிருந்த மக்களில் பலருக்கு, சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுயசார்புத் தொழில் முயற்சிக்கான மீளளிப்புக் கடனுதவித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் ரூபா 500 முதல் ரூபா 5000 வரை வழங்கப்பட்டது. உதவி பெறவேண்டியவர்கள் பலர் இருப்பதாலும், நிதி இருப்புக் குறைவாலும், திட்டத்தை மேலும் தொடர்ந்து செயற்படுத்துவதற்காகவும், மீளளிப்புக் கடனுதவித் திட்டமாக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் நூற்றுக்கு மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு மீளளிப்பு இல்லாத உதவிகளும் வழங்கப்பட்டன.

இன்றுவரை இம் மீளளிப்புக் கடனுதவித் திட்டத்தில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பலனடைந்துள்ளன. மேலும் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 150 குடும்பங்களுக்கு கோழிகளும் சிறு வியாபாரங்களுக்கென இருபத்தைந்து பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## புனர்வாழ்வு

இடம்பெயர்ந்து வந்த மக்களில் அநேகர் இராணுவ வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

துணைவனை இழந்த பெண்கள், பெற்றோரைப் பிரிந்த குழந்தைகள், பராமரிப்பற்ற முதியவர்கள், நேயாளிகள் என அநேகர் முகாம்களில் இருந்தனர்.

இவர்களின் நிலையைக் கருத்திற் கொண்டு விசேட புனர்வாழ்வுத் திட்டங்கள், சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டன.

பாதிக்கப்பட்டு ஆதரவற்ற நிலையிலிருக்கும் பெண்களுக்கென தையற் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது. இந்நிலையங்களில் அப்படிப்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது.

மேலும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கென கோழி வளர்ப்புத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அத்துடன் கிடுகு இழைத்தல், சந்தை வியாபாரம், விவசாயம் என்பவற்றின் மூலமும் இப் பெண்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். இதைவிட விதவைகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

இவற்றைவிட நோயாளிகள், ஆதரவற்றவர்கள், முதியவர்கள், ஊனமுற்றவர்கள் என்பவர்களைக் கருத்திற்கொண்டு இவர்களுக்கான விசேட புனர்வாழ்வுத் திட்டங்களின் அடிப்படையில், மாதாந்தக் கொடுப்பனவுகளும் சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்றன.

மற்றும் இம் மக்களின் மகப்பேறு, மரண நிகழ்வுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

## பொது விடயங்கள்

மனித சமூகத்தில் ஒற்றுமையையும், உறுதியையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தவல்லவற்றுள் ஒன்று விளையாட்டுத் துறை.

இக் கொத்தணிக் கிராமங்களில் பதினைந்திற்கு மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள், எம்மால் வழங்கப்பட்டுள்ளன.

கலை - இலக்கிய வடிவங்கள் சமுதாயத்தின் எண்ணத்தில் எப்போதும் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. இவ்வகையில், இங்கு பல கலை - இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

யாழ். கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் திருமலை இடம் பெயந்த மக்களால் உருவாக்கப்பட்ட ‘காணி நிலம் வேண்டும்’ என்ற நாடகமும், வன்னியிலுள்ள இடம் பெயர்ந்தமக்களால் உருவாக்கப்பட்ட ‘போராட்ட மேகங்கள்’ என்ற நாடகமும், இதில் குறிப்பிடத் தக்கவையாகும். இக் கலை வடிவங்கள் விடுதலைப்போராட்டத்தை வளர்த்துச்செல்ல முனைந்து நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சமூக- பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொத்தணிக்கிராமங்களில், ‘அறிவாலயங்களும்’ அமைக்கப்பட்டுள்ளன. இன்றுவரை 40இற்கு மேற்பட்ட அறிவு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வறிவாலயங்களுக்கான பத்திரிகைகளும், அறிவு நூல்களும் வழங்கப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

உடையார்கட்டுக் குளத்திலிருந்து பிறப்பெடுக்கும் மூங்கிலாறுக்குக் குறுக்காக, இடம்பெயர்ந்த மக்களின் கூட்டுழைப்பினால் அணைக்கட்டொன்று அமைக்கப்பட்டது வியக்கத்தக்கதொரு சாதனையாகும். இதன்மூலம் வெறும் பாலைவனமாய் இருந்த 80 ஏக்கர் நிலம், இரண்டு போகம் பயிர்செய்யக்கூடிய பசுந்தரையாக மாற்றப்பட்டது. சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் செலவிற்குள், அண்ணளவாக 15 இலட்சம் ரூபா பெறுமதியான நன்மையை, இத்திட்டத்தின்மூலம் இந்த இடம்பெயர்ந்த மக்கள் பெற்றுள்ளனர்.

# நீ அமைதியாக உறங்க...

சிறுகதை

வியர்த்தது. காலதரை நெட்டித் திறந்தான். நிலவு அறைக்குள் விழுந்தது.

கம்பியில் பிடித்து விளிம்பில் கால் வைத்து எட்டிப் பார்த்தான். சாய்ந்து கிடந்த வேலிக்கு மேலாக அந்த வெளி தெரிந்தது. இருட்டில் பார்த்தால் எதுவுமே தெரியாது. நெஞ்சத்தை ஏதோவொன்று அழுத்தும். ஆனால் நிலவில் இனிமைதான்.

எங்கும் வெண்ணிறப் படிமங்கள். மரங்களின் நிழல்கள் மறைக்க முயன்றன; முடியவில்லை.

நாலாவது வரிசையில் கடைசியா...... இடம் அடையாளம் தெரிந்தது. அங்குதான் அவனின் அண்ணன் உறங்குகின்றான்.

பின்பக்கம் சத்தம் கேட்டது. 'சமையற்கட்டைவிட்டு அம்மா இப்போதைக்கு வரமாட்டாள். இண்டைக் கெண்டாலும் அண்ணனிட்ட போவேணும்'. மனம் குறுகுறுத்தது.

'சே...... அண்ணா எவளவு இனிமையானவன்......'

அப்போதெல்லாம் வீட்டுக்கு முன்னுக்கு வெறும் பற்றைக் காடுதான். வளர்ந்து, உயரமாக, பார்க்கவே பயமாக இருக்கும். படலையைத் திறந்து வெளியில் வந்தால் அம்மா பின்னாடியே வருவாள்; பேசுவாள். 'அம்மா ஏன் இப்படிக் கத்துகிறாள்' என மனது சலிக்கும்.

'' ஏனம்மா...... ''?

'' பத்தேக்கை பேயள் பிசாசுகள் இருக்கு, உன்னை வந்து பிடிச்சுக் கொண்டு போயிடுங்கள்''.

இரவில் படுக்கும்பொழுது பயமாக இருக்கும். ஏதோ நெஞ்சை அழுத்துவது மாதிரி ..... காலதரை மூடுவது நல்லதாகப்படும், ஆனால் எழும்பப்பயமாக இருக்கும்.

கண்களை மூடினால் பேய்களும் பிசாசுகளும்...... கறுத்த - பற்கள் நீண்ட - தலை விரித்த... பிசாசுகள் கைகளை அகலவிரித்து இவனைப் பிடிக்க வருங்கள்.

ஓடுவான். பாம்புகள் 'பூச்சிகள் முட்கள் ... பயந்து நடுங்கியபடி நிற்பான். அகலவிரித்த கைகளுடன் பேய்கள் இவனை நெருங்குங்கள். அண்ணன் வருவான்; கையில் வாளிருக்கும். கைகளை ஓங்கி விசுக்குவான்.

பேய்களும் பிசாசுகளும் ஓடும். பாம்புகளும் பூச்சிகளும் செத்தழியும். அண்ணன் இவனைத் தூக்கி அணைப்பான். 'அவன் எப்போதும் வீரன்தான்.'

திடீரென ஒருநாள் வீட்டுக்கு முன்னால் வீதியில் பலர் குழுமினர். அன்றும் மறு நாளும் ஒரே வேலை. அம்மாவும், அண்ணனும் அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்கள். மூன்றாவது நாள் காலையில் அந்தப் பற்றைக் காடு முற்றாக இல்லாமல் போனது.

நிம்மதியாக இருந்தது. படலையைத் திறந்து முன்னுக்கு வரக் கூடியதாக இருந்தது. அம்மா முன்னர் போல் பின்னால் வருவதில்லை.

நாட்கள் சில சென்றன. வெயில் சாயும் மாலை நேரம். மக்கள் கூடினர். மாமாக்கள், அண்ணாக்கள். கைகளில் துப்பாக்கிகள்...... இவன் கண்களை அகலத் திறந்தபடி இருந்தான். அண்ணன் அருகில் நின்றான். அம்மா படலையுடன் ஒட்டியபடி வேர்த்து விறுவிறுக்க நின்றாள். இன்னும் சில நிமிடங்களில் அழத் தொடங்குவாள்.

புதைகுழிக்குள் பெட்டி ஒன்றை இறக்கினார்கள். அண்ணன் ஓடினான். அம்மாவும் போனாள். அம்மாவை ஒட்டியபடி நடந்தான். கிட்டவாகப்போனதும் எட்டிப் பார்த்தான்.

அண்ணனொருவன் உறக்கத்தில்...... சுற்றி நின்ற மாமாக்களின்-அண்ணாக்களின் துப்பாக்கிகள் வானத்தைப் பார்த்தன. முழங்கி ஓய்ந்தன. அம்மா அவனை இழுத்தணைத்தாள். திரும்பி நடந்தாள்.

இரவு, அவனுக்கு உறக்கம் வரவில்லை.

'' அம்மா, அந்த அண்ணைக்கு என்ன நடந்தது''?

'' அந்த அண்ணை நித்திரை கொள்ளுறான் ''.

''ஏன் அவனுக்கு வீடில்லையா''?

''இல்லை. அவனுக்கு அதுதான் வீடு. இந்த மண்ணும் காற்றும் நீயும்தான் சொந்தம்''.

அவனுக்கு விளங்கவில்லை. உறக்கமும் வரவில்லை. இரவு நீண்டது. 'பாவம் அவன் பேய்களுக்கும் பிசாசுகளுக்கும் நடுவில் என்ன செய்யப் போகிறானோ'?

நாட்கள் சென்றன. அண்ணாக்களில் பலர், அங்கு உறக்கத்தில்...... ஒவ்வொரு முறையும் அம்மா அழுதாள். அண்ணா கலகலப்பை மறந்து இறுகிப் போவான். இவனோ உறங்க மாட்டான். தவிப்பான். ஒருநாள் அம்மாவிடம் கேட்டான்,

''அந்த அண்ணாக்களை பேய் பிசாசுகள் ஒண்டுஞ் செய்யாதா''?

அம்மா சிரித்தாள் அவனைக் கட்டி அணைத்தாள்.

''அண்ணாக்களைக் கண்டா பேய் பிசாசுகள் பயத்தில் ஓடிடும்; அவங்கள் விரட்டிப் போடுவாங்கள்''.



'' உனக்காக...... நீ சிரிக்க......வளர......
சுதந்திரயா ஓடி ஆட . ... அமைதியா உறங்க .....''

அவனுக்கு அமைதியாக இருந்தது; மகிழ்ச்சியாகவும் இருந்தது. சில நாட்களில் அண்ணன் வீட்டை விட்டுப் போய்விட்டான்.

அம்மா அதனை எப்படி ஏற்றுக் கொண்டாளோ தெரியவில்லை. ஆனால் அவன் சோர்ந்துபோனான்.

அவனுக்கு அண்ணனின் அரவணைப்புத் தேவைப்பட்டது. அம்மாவிடம் கேட்டான்,

''அண்ணன் எங்க போட்டான்''?

''இயக்கத்துக்கு''.

''ஏன்''?

''போராட''.

அவனுக்கு விளங்கவில்லை'அம்மா இப்படித்தான். சரியாகப் பதில் சொல்லத் தெரிவதில்லை. அண்ணன் வர கேட்க வேண்டும்'.

இப்போதெல்லாம் அவன்தான் வாசலில் அம்மாவுடன் நின்றான். புதைகுழிக்குள் அண்ணாக்களை இறக்கும்பொழுது ஓடிச் சென்றான். அம்மா முன்னைவிட அதிகமாக அழுதாள். பார்ப்பதற்காகப் பரிதவித்தாள். வர வர அம்மாவின் போக்கு அவனுக்குப் பிடிக்கவில்லை.'நிம்மதியாக உறங்குவதற்காக யாரும் அழுவார்களா...?'

அமைதியான காலைநேரம். படலை திறந்து சத்தம் கேட்டது. அண்ணன் வந்தான். அவன் ஓடிச் சென்றான். கைகளைப் பிடித்து இடுப்பில் கால்களை வைத்து தோளுக்குத் தாவினான்.

அன்று முழுவதும் மகிழ்ச்சிதான். மகிழ்ச்சிப் பிரவாகம். அன்றுதான் அவர்களிருவரும் தனியாக இருக்கும் பொழுது அவன் கேட்டான்.

''ஏனண்ணா எங்களை விட்டுப் போனனி......''?

''உனக்காகத்தான்''. அவன் கன்னத்தைக் கிள்ளினான். விளங்கவில்லை.

''எனக்காக எண்டா......''?

அண்ணன் அவனைத் தூக்கி அணைத்தான்; முத்தமிட்டான்.

''நீ சிரிக்க...... வளர...... சுதந்திரமா ஓடி ஆட...... அமைதியா உறங்க......''

அவனுக்கு விளங்கியமாதிரியும் இருந்தது; விளங்காத மாதிரியும் இருந்தது. கேள்விகளை விட்டு விலகினான். அண்ணனின் தோளில் தொங்கிய துப்பாக்கியில் கண்கள் ஏக்கத்துடன் விழுந்தன. மெதுவாகத் தொட்டான்.

''இதென்னட்ட இருந்தா நானும் சுடுவன்''.

அண்ணன் துப்பாக்கியைக் கையில் எடுத்தான்; அவனின் கண்களை நன்றாக உற்றுப் பார்த்தான்.

''உனக்காக இது காத்துக் கொண்டுதான் இருக்கும்''.

அன்று இரவும் கனவில் பேய்களும் பிசாசுகளும் வந்தன. ஆனால் அண்ணாக்கு அருகில் ஏராளமான அண்ணாக்கள் வாள்களுடன் நின்றனர். பேய்கள் ஓடின. விழுந்தடித்து ஓடின. செத்தழிந்தன. கனவிலும் மகிழ்ச்சிதான்.

மறுநாள் அண்ணன் சென்றான். அதன் பின் நீண்ட நாட்களாக வரவில்லை. அவனுக்கு அண்ணனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. இதயம் தவித்தது. இடை இடைகாய்ச்சலும் வந்தது. முன்னால் புதைகுழிகளில் மேலும் மேலும் அண்ணாக்கள் உறக்கத்தில்......

ஒருநாட் காலை அண்ணனைச் சிலர் கொண்டுவந்தனர். கட்டிலில் கிடத்தினார்கள். அம்மா கதறி அழுதாள். ஓலமிட்டாள். இவன் கிட்டவாகப் போனான். யாரோ பின்னுக்கு இழுத்தார்கள். தூக்கினார்கள். 'விலகிச் சென்றார்கள்.

'அண்ணனுக்கு என்ன, அம்மா ஏன் அழுகின்றாள்'? அவனுக்குச் சினமாக இருந்தது.

'அண்ணன் ஏன் படுத்திருக்கிறான், என்னோட கூட கதைக்காமல்... இப்பெல்லாம் அவனுக்கு என்னில அன்பில்லை'. நினைக்க அழுகைவந்தது. அழுதான்; விம்மி விம்மி அழுதான்.

மாலை நேரம், அண்ணனைத் தூக்கினார்கள். அம்மா பெரிதாகக் குரல்வைத்து அழுதாள். நெஞ்சில் அடித்தடித்து அழுதாள். முடிவாக சரிந்து விழுந்தாள்.

வெளியில் வந்தவர்கள், முன்னால் உறங்கிக் கொண்டிருந்த அண்ணாக்களின் வரிசையின் பின்பாக அதோ தெரிகின்றதே அந்த இடத்தில், அண்ணனைப் புதைகுழிக்குள் இறக்கினார்கள்.

இவன் எட்டிப் பார்த்தான். சிரித்தபடி அண்ணா உறங்கிக்கொண்டிருந்தான். 'ஆனால், அண்ணா வீடிருக்கக்கூடியதாக ஏன் இங்க வந்து படுக்கிறான்'?

கேள்விகளுக்குப் பதில் இருக்கவில்லை. அம்மாவும் கேட்கக்கூடிய நிலையிலில்லை. கேட்டபொழுதெல்லாம் அழுதாள். விளங்காத மாதிரி ஏதோ சொன்னாள். 'அம்மாவுக்குப் பதில் சொல்லத் தெரிவதில்லை. அண்ணனிட்டத்தான் கேட்கவேண்டும். அவன் எப்போதாவது ஒருநாள் எழும்பி வருவான்.'

நாட்கள் சென்றன. அம்மா இயல்புக்கு வந்துவிட்டாள். எல்லாம் வழமையானது. ஆனால், அண்ணன் மட்டும் ஒரு நாளும் எழும்பி வரவில்லை. இப்போதெல்லாம் காலதர் மூடி இருந்தால் அவனுக்குத் தூக்கம் வருவதில்லை. திறந்தால் .... முன்பாக கல்லறைகளைத் தடவிவரும் தென்றலின் தடவுகை, அவனை உறக்கத்திற்கு அழைத்துச் செல்லும்.

'அண்ணனைக் கூப்பிடக் கூடாது. அவன் பாவம் நித்திரை கொள்ளுகிறான்' என்று, அம்மா சொல்லி இருந்தாள்.

அம்மா இல்லாத சில நேரங்களில் காலதரால் எட்டிப் பார்ப்பான். அண்ணனைக் கூப்பிட வேண்டும் போலிருக்கும்; ஆனாலும் ஒரு நாளும் கூப்பிடவில்லை.

'அண்ணா ஏன் இப்பிடி...... என்னட்டக் கூடவராம ...... நெடுகவும் படுத்துக் கொண்டு ...... அண்ணனிட்டயே கேட்க வேண்டும். பக்கத்தில போட்டா அவன் சொல்லுவான்.'

'இன்றைக்கு எப்படியும் அண்ணனடிக்குப் போகவேணும்.'

அம்மா பின் கட்டில். வெளியில் வந்தான். சந்தேகம் தட்டியது. 'அம்மா வேலையை முடித்து விடுவாளா ..?'

பின்னுக்குப் போனான். மெல்லிய விளக்கொளியில் அம்மா. கழுத்தைக் கட்டி அணைத்தான்; உரசினான்.

''விடப்பன் ...... வேலை இருக்கு. ......''

எட்டிப் பார்த்தான்.நிறையப் பாத்திரங்கள் கிடந்தன.

(09ஆம் பக்கம் பார்க்க )

# அடுத்தது என்ன?

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று பிரமிக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுநிற்கின்றது. யார் மீதும் தங்கியிராது எமது சொந்தக் காலில் - சுயபலத்தில் நின்று, நிலைதளராத உறுதியுடன் விடுதலைக்காகப் போராடுகின்றது.

தலைவர் பிரபாகரனின் தலைமையில் - தமிழீழத்தின் தேசிய விடுதலைச் சேனையாகிய புலிப்படை, உலகமே வியக்கத்தக்க ஒரு சிறந்த படையாக இன்று வளர்ந்து நிற்கின்றது.

ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளது உயிர்த்தியாகத்தால், இந்த உன்னத வளர்ச்சி எட்டப்பட்டிருக்கின்றது.

ஆயிரத்துத்தொள்ளாயிரத்துஎண்பதுகள்- இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன் புலிப்படை பற்றி மக்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆயினும் ''நாலு பேர் இருந்து என்னத்தைச் சாதிக்கப் போகின்றார்கள்'' என்ற கேள்வியே, மக்களிடம் இருந்தது. ஓர் ஆயுதப்

**தலைவர் பிரபாகரனின் உயர்ந்த வழிகாட்டலும், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளின் மகத்தான தியாகமும், உலகமே வியக்கும் இந்த உன்னத வளர்ச்சியை நாம் எட்டக் காரணமாய் இருக்கின்றன.**

போராட்டம்பற்றி-அதனது வெற்றி பற்றிக் கற்பனைசெய்து பார்க்கும் நிலையிற் கூட, அன்று மிகப்பெரும்பாலானஎமதுமக்கள்இருக்கவில்லை. 'நாலு துவக்கை வைத்துக்கொண்டு ஒரு நாட்டின் படையை எதிர்த்து எப்படிப் போராடுகிறது' என, அவநம்பிக்கை அடைந்திருந்தார்கள்.

1983இல்திருநெல்வேலியில் 13சிங்கள இராணுவம் கொல்லப்பட்டு அவர்களது துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்ட செய்தி கேட்டு, மக்கள் அதிர்ச்சியுற்றார்கள் - ஆச்சரியப்பட்டார்கள். 'பொடியள்செய்திட்டாங்கள்' என்று வியந்தனர். புலிகளின் கண்ணிகள் தொடர்ந்து வெடித்தன. படை வண்டிகள் நொருங்கின எனினும் மக்களின் நம்பிக்கையீனங்கள் நொருங்கவில்லை.

விடுதலைப்போர் தீவிரமாகியது. ரோந்து அணிகள் சிதறின; காவல்துறை நிலையங்கள் வீழ்ந்தன; எஞ்சியவை சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தன; இராணுவம் முகாம்களை விட்டு வெளிவர முடியாது உள்ளே முடங்கியது. மக்கள் மகிழ்ந்தார்கள் - வியந்தார்கள் - மனங்களில் நம்பிக்கை சிறிதளவு துளிர்விட, விடுதலைத் தீ சுவாலைவிட்டெரிந்தது.

''விடுதலைக்கு'' என்றுபுறப்பட்ட மக்கள் விரோதிகள் எல்லாம் களையெடுக்கப்பட, நிமிர்ந்த பனையாக வளர்ந்தது புலிகள் இயக்கம்.

திடீரென அரசியல் திருப்பம். இந்திய - சிறீலங்கா உடன்படிக்கை; இந்தியப் படையின் வருகை; புலிகளின் ஆயுதக் கையளிப்பு; அதைத் தொடர்ந்து இந்தியாவின் அப்பட்டமான துரோகத்தனம்.

சிங்கள அரசுடனும், தான் வளர்த்த துரோகக்கும்பல்களுடனும் கூட்டுச் சேர்ந்து இந்திய அரசு, புலிப்படையை அழித்து தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முயற்சித்தது.

திலீபனின் உயிர்த்தியாகம் - தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிருவரின் சாவு - பாரதத்தினது சுயரூபம் மெல்ல மெல்ல மக்களுக்குத் தெரியத் தொடங்கியது. இந்தியா தனது முதுகில் குத்துவதை தமிழீழம் புரிந்துகொண்டது. மூண்டது போர். இந்தியாவின் துணையில்லாமல் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெற முடியாது என்றே இந்திய அரசியல்வாதிகளும் - இராஜதந்திரிகளும் - அறிஞர்களும் திடமாக நம்பினர். எமது மக்களில் பலரும் அதையே நம்பினர். உலகமும் அப்படித்தான் பார்த்தது. ஆனால் இந்திய - புலிகள் போரின் முடிவில் அப்போலி எண்ணங்கள் உடைத்தெறியப்பட்டுவிட்டன.

'உலகத்தின்நாலாவதுபெரியபடையோடு... அதுவும் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு எப்படிப் போராடி வெல்வது? அழிவுக்குத்தான் வழிவகுக்கப்போகின்றது......'எமது மக்கள் எல்லோரும் நம்பிக்கையிழந்தனர். புலிகளின் சரித்திரம் முடியப்போகின்றது. இந்தியனை நாங்கள் வெல்லஇயலாது.எல்லோருக்கும்அவநம்பிக்கை, தோல்வி மனப்பான்மை. உண்மையிலேயே அது, விடுதலைப் போராட்டத்திற்கு வாழ்வா அல்லது சாவா என்பதைத் தீர்மானிக்கும் போர். ''முறிந்தது பனை'' என்றவர்கள் பலர்.

ஆனால், எமது தாய் மண்ணில் வீசி அனர்த்தம் புரிந்துகொண்டிருந்த இந்தியச்சூறாவளியை, பிரபாகரன் என்ற பெரும் புயல் மெல்ல மெல்லத் தடுத்து நிறுத்தத் தொடங்கியது. நாட்கள் செல்லச் செல்ல மலையாகத் திரண்ட மக்களின் துணையுடன், புலிப்படை காவியம் படைக்கத் தொடங்கியது. சுமார் இரண்டரை ஆண்டுகளின் பின் இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேற்றப்பட்டது. போராட்டம் மிகப்பெரிய தடையை வெற்றிகரமாகத் தாண்டிவிட்டதென, தமிழீழம் மகிழ்ந்தது. மீண்டும் மக்களிடம் நம்பிக்கை ஒளி தெறித்தது. வீதிகளெங்கும் வரிப்புலி வீரர்கள் உலாவர, தமிழீழத்தின் தென்றல் நிமிர்ந்த பனைகளின் ஓலைகளை உரசி புலிக் கொடியை அசைத்துச் சென்றது.

சிறீலங்கா அரசுடன் இராஜதந்திரக் காய் நகர்த்தல்கள் தொடங்கின. இலைமறைகாயாக நாம் வெற்றிகளைத் தேடிக் கொண்டிருந்தோம். ஆனாலும், வழமைபோல சிங்களப் பேரினவாதப் பூதம் தலையெடுக்கத் தொடங்கியது. மீண்டும் வெடித்தது போர்.

இது வித்தியாசமாக இருந்தது. சிங்களக் காவல்துறை நிலையங்கள் துடைத்தெறியப்பட்டன. படைமுகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. புலிகளின் ஆயுதக் கிடங்கில் மாரி பொழிந்தது.

அதே சமயம் இறுக்கமான பொருளாதாரத் தடை, உணவின்மை, மருந்தின்மை, எரிபொருளின்மை, மின்சாரம்இன்மை. மீண்டும் மக்களிடம் கேள்விகள் எழுந்தன.

இவை ஒன்றுமே இல்லாது எப்படிப் போராடுவது?. இவற்றைத் தாங்கிக் கொண்டு எப்படி மக்கள் உயிர் வாழ்வது? மீண்டும் மக்கள் மனங்களில் அவநம்பிக்கை - தோல்வி மனப்பான்மை. சிங்கள அரசும் பொருளாதாரத் தடையைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கெதிரான இறுதி ஆயுதமாகவே பயன்படுத்தியது.

இதை எப்படி நாம் எதிர்கொள்வது என்ற கேள்வியே எங்கும் ஒலித்தது. பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள எம்மிடம் வளங்கள் இல்லையே - இனியென்ன போராட்டத்தைக் கைவிடவேண்டியதுதான். இல்லையென்றால் பட்டினியால் மக்கள் அழிந்துபடப் போகிறார்கள். நாட்செல்லச் செல்ல இத்தகைய அவநம்பிக்கைக் குரல்கள் குறையத் தொடங்கின. ஆனால் போராட்டம் வளர்ந்தது; மக்களிடமும் விடுதலை உணர்வு அதிகரித்தது.

அதேவேளை, தரைவழியாக நகர முடியாத படையினர் வான்வழி வந்து அழிவுகளைச் செய்தனர்.

'இந்த பொம்மரை, கெலியை விழுத்தாமல் என்னவென்று சிங்களப் படைகளை வெல்லுறது?' மக்கள் ஆதங்கப்பட்ட போது,யாழ். கோட்டையில் அது நிகழ்ந்தது. வவுனியா, இயக்கச்சி என்று வெற்றிப்பட்டியல் நீண்டது. மக்கள் மகிழ்ந்தார்கள். எமது போராட்டத்தின் வெற்றித் தொடரில் அடுத்தது என்ன என்ற ஆவல், அனைத்து மக்களிடமும் எழுந்தது.

ஆனையிறவுப் பெருஞ்சமர் தொடங்கியது. நீண்ட-பெரிய மரபுவழிச் சமர். நேருக்குநேர் இரண்டு இராணுவங்கள் மோதுகின்றன என உலகம் கூறியது. புலிகளின் இராணுவ வளர்ச்சியை-வீரத்தை உலகம் கண்டது; வியந்தது. ஆனாலும், சிறீலங்காவின் முப்படைகளையும் எதிர்த்துப் போராடி வெல்ல புலிகளுக்கு நவீன ஆயுதங்கள் வேண்டுமே! அதை எந்த நாடு வழங்கும்? அதற்குச் சாத்தியம் உண்டா என, மக்கள் கேள்விகளை எழுப்பினர்.

'புலிகளின் ஆயுதக்கிடங்கு சிங்கள இராணுவ முகாம்களில்தான் உள்ளது' என்றனர், புலிகள்; ஏற்கத் தயங்கினர் மக்கள்.

தமிழீழமெங்கும் சிங்களப் படைகள்மீது தாக்குதல்களை நிகழ்த்தி, சிறுகச் சிறுக ஆயுதங்களைக் கைப்பற்றி, பெருவெள்ளமெனக் குவித்தனர் புலிகள். அதன் ஒரு முக்கிய கட்டமாக, கட்டைக்காட்டில் சிங்களப்படையின் ஆயுதக்கிடங்கைக் கைப்பற்றி, மக்களை மலைக்கச் செய்து மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.

இவ்வாறாக எல்லோரையும் பிரமிக்கவைத்து நாங்கள் போராட்டத்தை வளர்த்து வருகின்றோம்.

எமது மக்கள் மத்தியில் வேரூன்றி இருக்கும் ஆயுதப் போராட்டம் தொடர்பான அவநம்பிக்கையை- நீண்டகால அடிமைவாழ்வு ஏற்படுத்திய தோல்வி மனப்பான்மைகளை - எம்மால் சாதிக்க முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையை - இவையெல்லாவற்றையும் உடைத்தெறிந்துகொண்டு, நாம் புதியதொரு வரலாற்றைப் படைத்து வருகின்றோம்.

முடியுமா? சாத்தியமா? என்று மக்கள் குழப்பத்தில் இருந்த பொழுது, ஒவ்வொன்றாக நாம் வெற்றிக்கனிகளைப் பறித்து, படிப்படியாக மக்களிடம் நம்பிக்கையையும் விடுதலை உணர்வையும் ஊட்டி வருகின்றோம்.

முன்னரைப் போலல்லாது இப்போது மக்களின் மனநிலைகளில் பெருமளவு மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

ஆனாலும் மக்களின் சந்தேகங்களுக்கு- கேள்விகளுக்கு முடிவில்லை. இவை ஒரு வளர்ச்சிப் பரிமாணத்தில் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது.

இப்போது ஒவ்வொரு காலையிலும் புலிகளின் அடுத்த 'வெற்றி என்ன என்ற செய்திக்காக, மக்கள் காத்துக்கிடக்கின்றார்கள்.

ஒவ்வொரு வெற்றியையும் நாம் பெற்றுக்கொள்ளும்போது மக்கள் அடுத்த வெற்றியை எதிர்பார்க்கத் தொடங்குகின்றனர்.

முடியுமா? சாத்தியமா? என்று எழும் சந்தேகங்களுக்கெல்லாம், புலிகளால் முடியும்; புலிகளின் செயற்பாட்டால் எதுவும் சாத்தியமாகும் என்ற பதில்களே நடைமுறையில் கிடைத்துவருகின்றன.

இழப்பு - அழிவுகள் துன்பங்கள் மத்தியில், நிரந்தர விடிவைத் தரக்கூடிய தனியரசொன்றிற்கான அத்திவாரங்கள் போடப்பட்டு வருகின்றன என்பதை, பலர் உணரவில்லை.

தமிழனுக்கென்றொரு படை, தமிழனுக்கென்றொரு காவல்துறை, தமிழனுக்கென்றொரு நீதி - நிருவாகத்துறை, தமிழனுக்கென்றொரு அரச இயந்திரம் பரபரப்பில்லாமல் கட்டியெழுப்பப்படுவதையும் பலர் உணரவில்லை.

யாழ். கோட்டை மீட்கப்பட்ட பொழுது......

மாங்குளம் முகாம் தகர்க்கப்பட்ட பொழுது...

குண்டு வீச்சு விமானங்கள் வீழ்த்தப்பட்ட பொழுது......

அராலித்துறைக் கண்ணியில் சிங்களத் தளபதிகள் அழிந்த பொழுது......

மண்டைதீவில் நவீன விசைப் படகைக் கைப்பற்றியபொழுது...

கட்டைக்காட்டில் ஆயுதக்கிடங்கைக் கைப்பற்றியபொழுது......

இயக்கச்சியில் சினச்சகடையை சுட்டுவீழ்த்தியபொழுது...

இன்னும்...... இன்னும்...... நிகழ்கின்றபொழுது......

எதிர்பார்ப்புக்கள் தொடருகின்றன......

எங்கள் இலட்சியப் போரின் வெற்றித் தொடரில், அடுத்தது என்ன?

❋

## நீ அமைதியாக....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டிட்டு மெதுவாக முன்னால் வந்தான். நிலவு வெளிச்சம் போட்டது.

படலையைத் திறந்தான். வீதியைக் கடந்தான். இரும்புக் கம்பிக் கதவு மறித்தது. உள்ளே பார்த்தான்.

வெண் படிமங்கள்போல் கல்லறைகள். நிலவு கல்லறைகளைத் தொட்டுத் தடவித் தாலாட்டியது.

கம்பிகளால் ஏறி உள்ளே இறங்கினான். இனிய வாசம். காற்றின் தடவலில் குளிர்மை.

மெதுவாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான். அண்ணனுக்கு அருகில் போய் நின்றான்.

நிலவு. மரங்களின் சிலிர்ப்பு. அமைதி.

''அண்ணா, ஏன் இங்க வந்து படுத்தனி''?

அரசமரம் சத்தமாகச் சிலிர்த்தது. அருகில் நின்ற வேம்பு ஆடியது. மற்றைய மரங்களும் அப்படியே...... இலைகள் உதிர்ந்து விழுந்தன.

''உனக்காக ......நீ சிரிக்க..... வளர ...... சுதந்திரமா ஓடி ஆட... அமைதியா உறங்க ......''

அண்ணனின் குரல்தான். இல்லை......அரசமரம். எதுவோ...... அவனுக்கு விடை தேவைபோல இல்லை.

அருகாக இருந்தான். குனிந்து முத்தமிட்டான். எழுந்து நடந்தான். காற்று வீசியது. அரசமரம் சத்தமாகச் சலசலத்தது. மற்றைய மரங்கள் ஆடின.

''நீ சிரிக்க ...... வளர ...... சுதந்திரமா ஓடி ஆட ..... அமைதியாக உறங்க......''

காற்றில் குரல். அண்ணன்தான். இல்லை...... அரசமரம். இல்லை...... எல்லா அண்ணாக்களும்.....! ❋

# தோல்வியில் துவளும் இராணுவ வழிமுறைகள்

கடந்த ஒருமாத காலத்தில் தமிழீழ விடுதலைப் போரை நாடி பிடித்துப் பார்க்கக்கூடிய விதத்தில், நான்கு பெரிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

ஒன்று, மட்டக்களப்பில் செய்யப்பட்ட - வெற்றி பெறாத இராணுவ நடவடிக்கை (ஜெயபகர).

இரண்டு, அளம்பில் இராணுவ முகாம் அகற்றப்பட்டது.

மூன்று, சிறீலங்காவின் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டது.

நான்காவது, பலாலி இராணுவ விமான இறங்குதளம்மீது நாம் தொடுத்த, வெற்றிகரமான தாக்குதல்.

இந்த நான்கு சம்பவங்களும் சிறீலங்காப் படையின் இராணுவ இயலாமைகளையும், அது சந்தித்து நிற்கும் இராணுவ நெருக்கடிகளையும் ஓரளவு வெளிக்காட்டியுள்ளன.

இராணுவ வழிமுறைகள்மூலம் புலிகளை வென்றுவிடலாம் என்ற நம்பிக்கை, கொழும்பு வட்டாரங்களில், கடந்த ஒரு மாத கால சம்பவங்களால் ஏறக்குறைய அடியோடு அற்றுப் போகும் சூழல் உருவாகி வருகின்றது எனலாம். கொழும்புப் பத்திரிகைகளில் வரும் செய்திகள் – போர் ஆய்வுக் கட்டுரைகளும், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ வல்லுனர்களது கருத்துக்கள்– பேச்சுகளும், இவற்றை வெளிப்படுத்துகின்றன.

சிங்களப் படைகளின் போரிடும் உறுதியைச் சீர் செய்வதற்காக – போரில் ஒரு முன்னேற்றத்தைக்காண்பதற்காக – சிறீலங்காப் படைத்துறைத் தலைமையில் செய்யப்பட்ட மாற்றத்தின் பின்னும், சிங்களப் படைகள் போரில் எந்தவித முன்னேற்றத்தையும் அடையவில்லை. முப்படையிலுள்ள சிங்கள இளைஞர்களின் போரிடும் உறுதியைச் சீர்செய்யக்கூடிய எந்த ஒரு இராணுவ வெற்றியும், சிங்களப் படையின் தரப்பில் நிகழவுமில்லை. இந்த நிலையில் போர் தொடர்பாக சிங்கள தேசத்தில் ஏற்பட்டிருந்த சலிப்பு – அவநம்பிக்கை தொடர்ந்தும் வளர்ந்து செல்கின்றது.

சிங்கள இராணுவ இயந்திரத்தின் தலைமைப் பொறுப்பை புதிதாக ஏற்றுக்கொண்ட ஜெனரல் கமில்டன் வணசிங்கா, தனது பதவியை நிலைநிறுத்தும் நோக்குடன் மிகவும் அவதானமாகத் திட்டமிட்டுப் பலத்தைக் குவித்து, மட்டக்களப்பில் ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்துபார்த்தார். இந்த இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக முடிய வேண்டும் என்பதில், கூட்டுப் படைத் தலைமையகம் மிகவும் கவனமாக இருந்தது.

புதிதாகப் பதவி ஏற்றபின் முதன்முதலில் செய்யப்படும் இராணுவ நடவடிக்கை பெரு வெற்றியில் முடிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பினாலேயே, அந்த இராணுவ நடவடிக்கையை யாழ்ப்பாணத்தில் செய்யாது மட்டக்களப்பிற் செய்ய, முடிவெடுத்திருந்தார்.

மட்டக்களப்புக் காடுகளிலிருந்து புலிகளை அப்புறப்படுத்தும் நோக்கங்கொண்ட இந்த இராணுவ நடவடிக்கைக்கு, 'ஜெயபகர' என்ற பெயரும் சூட்டப்பட்டிருந்தது. இந்தச் சிங்களச் சொல்லின் பொருள்– 'வெற்றித் தாக்குதல்' என்பதாகும்.

அதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளை வெற்றிகரமாக அழித்தொழிப்பது அல்லது விரட்டியடிப்பது என்பதே, இதன் அர்த்தமாகும்.

கடந்த 8.11.92ம் திகதி விமானங்கள், உலங்கு வானூர்திகளின் உதவியுடன் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. காடுகள், வயல்கள், காட்டோரக் கிராமங்கள் எங்கும் குண்டுகளை வீசிக்கொண்டு அந்த இராணுவ நடவடிக்கை நகர்ந்தது.

கொழும்புப் பத்திரிகைகள் அனைத்திலும் தம்பட்டம் அடிக்கப்பட்டு நடாத்தப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்தது என்றும், அது தனது நோக்கை எய்திவிட்டது என்றும், படைத்துறைத் தலைமை பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டது. சிங்களப் பத்திரிகைகளும் அதை அப்படியே விழுங்கிச், சிங்கள மக்களிடம் கக்கின.

ஆனால், இந்த இராணுவ நடவடிக்கையில் ஒரு புலி வீரர் தானும் சாவைச் சந்திக்கவில்லை என்பது, குறிப்பிடத்தக்கது. அதேசமயம் இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட உலங்கு வானூர்தி ஒன்றையும் சிங்களப் படை இழந்தது. அவ் இழப்புடன் அந்த இராணுவ நடவடிக்கையும் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஏற்கெனவே ஜெனரல் கமில்டன் வணசிங்காவிற்கு படைத்துறைத் தலைமைப் பீடத்துள் இருந்த எதிர்ப்பும் ஒத்துழையாமையும், இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்வியால் மேலும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வரும் மாதங்களில் சிங்களப் படை, மேலும் பல பின்னடைவுகளைச் சந்திக்கும் என ஊகிக்கக்கூடியதாக உள்ளது. இதேசமயம் சிறீலங்காவின் கடற்படைத் தளபதி கொழும்பில் நடந்த தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டதாக, கொழும்பு வானொலி அறிவித்துள்ளது.

லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விமலரட்ண, றியர் அட்மிரல் ஜெயமகா, அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ போன்ற அதி உயர் தளபதிகளின் அடுத்தடுத்த இழப்புகள், சிங்களப் படைபலத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன – ஏற்படுத்தும் என்பது, வெளிப்படை. இத்தகைய அதி உயர் தளபதிகளின் இழப்புக்களை ஈடுசெய்ய முடியாது, சிறீலங்கா அரசு திண்டாடுகின்றது. அத்துடன் இவ் இழப்புகள் பிரேமதாசா அரசுக்கு, அரசியல் நெருக்கடிகளையும் தலையிடிகளையும் கொடுத்து வருகின்றன.

இதேவேளை 23.11.92 அன்று, பலாலி இராணுவத் தளத்தின் கிழக்குப் பகுதியில், சுமார் 4½ கி. மீ. நீளத்தில் அமைந்திருந்த 150 இற்கும் மேற்பட்ட இராணுவக் காவலரண்களை நாம் தாக்கி அழித்துள்ளோம்.

இத்தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், 70 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றுடன் பெருந்தொகையில் இராணுவத் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அடுத்த நடவடிக்கை என்ன என்று முடிவெடுக்க முடியாது குழம்பிக் கொண்டிருந்த சிறீலங்காப் படைத்துறைத் தலைமைக்கு ஆச்சரியமூட்டும் இப் பெரும் தாக்குதல், மேலும் குழப்பத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

## விடுதலைக்கு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு அம்மா கொடுத்தாள். ஆனாலும் எல்லாத் தாய்மாருக்கும் இருக்கும் இயல்பைப் போலவே, சஞ்சீவ்வும் நெடுமாறனும் போராடப் புறப்பட்டபோது, அம்மாவின் மனம் கவலை கொண்டது; அழுதும் கூட இருக்கிறாள். ஆனால், அம்மா தடுக்கவில்லை. திரும்பி வாங்கோ என்று கேட்கவில்லை.

சோதி அண்ணன், அம்மாவின் மூன்றாவது பிள்ளை. இந்தியப் படை வளைத்து நின்ற நாட்களில் புலிகளின் தகவற் தொடர்பாளராகச் செயற்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிக்குச் சென்று வந்து- புலிகளுக்கிடையில் முக்கியமான தகவல்களைப் பரிமாறினார்.

புலிகளின் உற்ற துணையாக நின்று இவர் செயற்படுகின்றார் என்பது, துரோகிகளுக்குத்தெரிந்திருந்தது. இந்த விடயம் அவர்களுக்குத் தெரியும் என்பது சோதி அண்ணனுக்கும் தெரிந்திருந்தது. ஆனாலும், அவர் துணிவோடு இயங்கினார்.

01 - 10 - 1988 அன்று, சோதி அண்ணனின் வீடு.

சாவு அவரின் கதவைத் தட்டியது.

''சோதி அண்ண ...... சோதி அண்ண.....''

'எங்கட பொடியள் போலக் கிடக்கு' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, ''ஆரது தம்பி ...... உள்ளுக்கை வாங்கோவன்......'' என்றபடி படலையை எட்டிப் பார்த்தார்; அதிர்ந்தார். நெஞ்சு விறைத்தது - அவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

''அண்ணை...... உங்களில் ஒரு விசாரணை...... எங்களோட வாங்கோ; திருப்பிக் கொண்டுவந்து விடுறம்'' - ஒரு தாடிக்காரன் சொன்னான். மனைவி ஓடிவந்து தடுத்தாள் - கதறினாள். பிள்ளைகள் அழுதார்கள்; ஆனாலும் அவர்கள் கூட்டிச் சென்றார்கள்.

சில மணித்துளிகள் கழிந்தன. நடு வீதியிலேயே...... துப்பாக்கி வேட்டோசை ஊரெங்கும் எதிரொலித்தது.

* * *

அம்மாவின் நாலாவது பிள்ளை குட்டி அண்ணன். புலிகளோடு சேர்ந்து நின்றதால் இந்தியப் படையும், துரோகிகளும் அவரைக் குறிபார்த்துத் திரிந்தார்கள். அடிக்கடி அவரின் வீட்டுக்குப் போனார்கள்; கேள்விகளால் துளைத்தார்கள். அவர்களின் தொடர்ச்சியான தொல்லைகள், அவருக்கு ஏற்கெனவே இருந்த இருதய நோயை இன்னும் அதிகரித்தது. ஒருநாள் கடலில் தொழிலுக்குப் போயிருந்த குட்டி அண்ணனுக்கு மாரடைப்பு வந்து, அம்மாவிடமிருந்தும் எம்மிடமிருந்தும் பிரித்துவிட்டது. இப்போது குட்டி அண்ணனின் மகள் துப்பாக்கியோடு களத்தில் நிற்கிறாள்.

* * *

அக்காவின் கணவர் சிறீதரன். இந்தியப் படையினரும், கூடித்திரிந்த கும்பல்களும் அவரை அடிக்கடி பிடித்துச் சென்றார்கள். அப்போதெல்லாம் அவர்களது இரும்புக்கம்பிகளும், எஸ்லோன் குழாய்களும்தான் அவருடன் பேசின.

1989 இன் நடுப்பகுதியில் ஒரு இரவு -

வழமைபோல அவர்கள் அவரைப் பிடித்துச் சென்றார்கள். மறு நாள் அவர் திரும்பி வரும்போது - உடலில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்திய உட்காயங்களோடு வந்தார்.

மிகவும் ஆபத்தான நிலையில் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனாலும்... அவரைக் காப்பாற்ற முடியவில்லை. எம்மைப் பிரிந்து திரும்பி வரமுடியாத தொலைவுக்குச் சென்றுவிட்டார். அதன்பின்பு அவரினதும், அக்காவினது பிள்ளை சுபாஜினி, பதுமநிதியாகி சண்டைக்களங்களில் நின்றாள்.

அம்மா கட்டிலில் இருந்து கொண்டே, முன்னால் தொங்கிக் கொண்டிருக்கும் பதுமநிதியின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பதுமநிதி அம்மாவின் பேரப்பிள்ளை. ஆனையிறவுப் பெருஞ் சமரில் ஒரு நாள் சண்டையில் - அவள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள்.

அம்மாவுக்கு ஏற்பட்ட இந்தத் தொடர் இழப்புகள், அவளை வேதனையில் ஆழ்த்தின. ஆனாலும் அவள் உறுதியோடும், நம்பிக்கையோடும் வாழ்கிறாள்.

அம்மாவின் மற்றைய மூன்று பிள்ளைகள் இப்போதும் புலிகளோடு நிற்கிறார்கள்; தமது உடன் பிறந்தவர்களின் நினைவுகளோடு, தேசத்திற்காக உழைக்கின்றார்கள்.

அம்மா, கதிரையில் வாழத் தொடங்கி பலவருடங்கள் ஆகிவிட்டன. அதில் இருந்துகொண்டு தான்துயரங்களைத்தாங்கிக்கொண்டாள். உண்மைதான்..., அம்மாவால் நடக்க முடியாது.

அவளை அந்தக் கொடியநோய் முடக்கிவிட்டது. அசையாமல் இருந்து இரவுகளில் மட்டும் மனதிற்குள் அழும் அம்மாவின் மனதிற்குள்ளும், நிறைவான சம்பவங்கள் உண்டு.

ஒரு இரவு, அம்மா வழமை போலவே இருளுக்குள் தன் பிள்ளைகளை இதயத்தால் தேடிக் கொண்டிருந்தபோது, கதவு தட்டப்பட்டது. விழித்தாள்.

யாரோ ஓடிச்சென்று கதவைத் திறந்தனர்; வெளிச்சம் பரவியது. தலைவர் பிரபாகரன் வந்தார்.

அம்மாவால் நம்பமுடியவில்லை. ஏதோவொரு பரவசத்தில் அம்மா...

(11ஆம் பக்கம் பார்க்க)

## அனல்களை....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறி இருந்தான். இயக்கத்தின் பொருளாதார அபிவிருத்தி வேலைகள் பெரும்பாலும் அவனில்தான் தங்கி இருந்தன.

பல ஏக்கர் பரப்பளவில் வேளாண்மை செய்தான். இரவும் பகலும் வயல்வெளிக்குள்ளேயே விழித்திருந்தான். மற்றைய வேலைகளிலும் அப்படித்தான். அதற்குள் சண்டை என்றதும் வந்து நிற்பான்; தானும் பங்குகொள்ள வேணும் என்று சண்டை பிடிப்பான்.

அவனை எப்படி அனுமதிக்க முடியும்?

அவனது ஒரு தம்பியான பிரிஸ் வீரமரணமடைந்திருந்தான். மற்றைய தம்பியான பீற்றரும் தாக்குதற் களங்களில் முன்னுக்கு நின்றான்.

பெரும்பாலும் இராசதுரைக்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. ஆனால் ஒரு தாக்குதலின் பின்னணி வேலைகள் முழுவதும் அவன் தலையிலேயே இருக்கும். அப்படி இருந்தும் ராதா அண்ணையுடன் சென்று,யாழ். தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்த மி ஷி முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்றிவிட்டு வந்தான்.

பூநகரி கோட்டை இராணுவ முகாம் தாக்குதலுக்குத்திட்டமிட்ட பொழுது, மன்னாருக்கு வந்து சேர்ந்த பீற்றரும் இருந்தான்; இராசதுரையும் இருந்தான். இருவருமே தாக்குதலில் பங்குபற்ற வேண்டும் என நின்றனர்.

தவிர்க்க முடியவில்லை. அந்தத் தாக்குதலில் இருவருமே பங்குபற்றினார்கள்.

அம்மாவுக்குத் தன் பிள்ளைகளை நினைக்கப் பெருமையாக இருந்தது. அவளுக்கு எல்லாரும் பிள்ளைகள்தான்.

இந்தியப் படைகளுடனான போர் ஆரம்பமான பொழுது, பீற்றரும் இராசதுரையும் மிகவும் தேவையானவர்களாக இருந்தார்கள். கிராமங்களிலும் காடுகளிற்குள்ளும் அடிக்கடி இந்தியர்களைச் சந்திக்கவேண்டியிருந்தது. சண்டையின் பின்பு இடம்மாறிச் செல்லவேண்டி இருந்தது. அண்ணன் தம்பிகள் இருவரும் வேறுவேறு முனைகளில் நின்றனர். அந்தக் கடினமான நாட்களில் அவர்களிருவரும்தான் வழிகாட்டிகள்.

காட்டிற்குள் வாழ்ந்தாலும் உணவுக்காக எப்படியோ கிராமங்களிற்குத்தான் வரவேண்டியிருந்தது. அம்மாவின் வீடோ இரவில் மட்டும் இயங்கும் இரகசியத் தங்ககம். அநேகமாக அந்த வீடு இரவுகளில் உறங்குவதில்லை. நீண்ட நாட்கள் அந்த வீடு அப்படித்தான் இருந்தது. காலப்போக்கில் தேசவிரோதிகளும் இந்தியர்களும் அங்கு அடிக்கடி வரத்தொடங்கினார்கள். ஓடி ஒளிப்பதும் திரும்பி வருவதும் அவர்களின் வாழ்க்கையானது.

*1988*, ஐப்பசித் திங்கள், இரவு. பீற்றரும் அவன் தோழர்களும் இராணுவத்தினர் வரும் பாதையில் பொறிவெடிகளைப் புதைத்துக் கொண்டிருந்தார்கள். பொறிவெடி ஒன்றின் தவறுதலான முழக்கம்.

பீற்றரை அவன் தோழர்கள் தூக்கிவந்தார்கள். அவனுக்குக் கண்கள் இரண்டும் தெரியவில்லை.

இரவு, காட்டுக்குள் இருந்தோம். வைத்தியவசதியில்லை. இதயங்கள் துடித்தன - அவன் காப்பாற்றப்பட வேண்டும். அந்த வெறுப்பூட்டும் இரவு எப்படியோ முடிவுக்கு வந்தது.

மறு நாள். பீற்றரை வேறு மாவட்டத்திற்கு வைத்திய வசதிக்காக அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. பீற்றரின் மூத்த அண்ணன் இராசதுரை முன்னால் வழிகாட்டியாக நடந்தான். பின்னால் பீற்றரைத் தூக்கிக்கொண்டு அவன் தோழர்கள் நடந்தார்கள்.

சின்ன வயதில் அவர்கள் ஒன்றாக உடும்புக்கும், தேனுக்கும் நடந்தவர்கள் தான்; ஆனால் இன்று...... உயிருக்குப் போராடும் தம்பி...... கண்களை இழந்து......

காடு முடிந்தது. அவர்களை அழைத்துப்போக உழவுயந்திரத்தில் வேறு தோழர்கள் வந்திருந்தார்கள். அனைவரையும் ஏற்றிக்கொண்டு அந்த உழவுயந்திரம் காட்டுப் பாதைகளின் வழியே ஓடியது.

முன்னுக்கு இருவர் மிதிவண்டியில் வெடிப்பதற்கு தயாராக வைத்திருந்த கைக்குண்டுகளுடன் பாதுகாப்புக்காகச் சென்றுகொண்டிருந்தார்கள்.

வழியில், பற்றைக்கூடலொன்றுக்குள் இந்தியர்களும் தேசவிரோதிகளும் பதுங்கியிருந்தது எவருக்குமே தெரியாது.

மிதி வண்டி கடந்து ஓடியது. வெடிச் சத்தங்கள். உழவுயந்திரம் திசை கெட்டு ஓடி, மோதி நின்றது.

எல்லாமாக பதினொரு தோழர்களை நாம் இழந்திருந்தோம், அம்மாவின் புதல்வர்கள் பீற்றர், இராசதுரை......

காற்றில் செய்தி பறந்தது. அம்மா ஏற்றுக்கொள்ளமுடியாமல் தவித்தாள். அழுது துடித்தாள். கட்டி அழுவதற்கு அவளுக்கு பிள்ளைகளின் உடல்கள்கூடக் கிடைக்கவில்லை. அதற்காகவும் அம்மா அழுதாள். கடவுளே! இரண்டு பேரும் ஒன்றாக...... அந்த அம்மாவால் துயரத்தை எப்படித் தாங்க முடியும்!

இத்துடன் மூவர்...... அவள் வயிற்றில் பிறந்தவர்கள்...... ஒருவரின்உடலைக்கூட ..... அம்மா அழுதாள்; அழுது தீர்த்தாள்.

இந்தியர்களுடனான சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. அதன் பின்பும், காட்டின் விளிம்பில் ஒரு தலை எழுந்து பீற்றரின் வீட்டை எட்டிப் பார்க்கும்.

அதற்கிடையில் அம்மா பார்த்திருப்பாள். சாப்பாடு அல்லது தேநீர். அம்மா காட்டு விளிம்புக்குக் கொண்டு செல்வாள். சிறிது நேரத்தில் அந்த இளைய புலிகள் காட்டில் மறைந்துபோவார்கள்.

போராட்டம் வளர்ந்தது; இந்தியர்கள் வெளியேற்றப்பட்டார்கள்; இயக்கம் மிகப் பெரும் அமைப்பாக வளர்ந்தது.

இன்று புதியபோராளிகள் நடந்து கொண்டிருப்பார்கள். ஆச்சி வீதியில் நின்று, வியப்புக் கலந்த மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருப்பாள்.

யாராவது விசயம் தெரிந்தவன் ஆச்சியைப்பற்றிச் சொல்வான். புதியவர்கள் மரியாதையுடன் நிற்பார்கள். ஆச்சியுடன் கதைப்பார்கள்; செல்லங் கொஞ்சுவார்கள்.

எதிரில் நிற்கும் குறும்புக்காரப் புதியவன் ஒருவனின் இரண்டு காதுகளையும் பிடித்திழுத்து, செல்லமாகத் தலையில் இடிப்பாள் ஆச்சி. தூரத்தில் நின்று அப்பு பார்த்து இரசிப்பார்.

அந்தச் சிறிய குடிசையின் ஒரு பக்கமாக தலைவரின் படம் இருக்கும். மற்றைய பக்கத்தில் மாவீரரான அம்மாவின் பிள்ளைகளின் படங்கள் இருக்கும். தலைவரைக் காட்டி, ''இதுஎன்மூத்தமகன்'' என்பாள் அம்மா. ஆச்சியைத் தெரிந்த பழைய போராளிகள் பேசாமல் இருப்பார்கள். புதியவர்களோ மகிழ்ச்சியுடன் சிரிப்பார்கள். தனது பிள்ளைகளின் படங்களைப்பார்த்ததும் அம்மாவின் முகம் சட்டெனக் கறுக்கும். ஒரு கணம் கவலையில் தவிப்பாள்; பின்பு சமாளித்துக் கொள்வாள்.

''நீங்கள் எல்லாருமே எனது பிள்ளைகள் தான்ரா''- சிரிப்புடன் ஆச்சி தனது பிள்ளைகளை அணைப்பாள்.

சரி, இப்போது சொல்லுங்கள் அந்த வீரத்தாய் வணக்கத்திற்குரியவள் இல்லையா! விலகி நில்லுங்கள்; அம்மாவருகிறாள். அவளுக்கு மரியாதை செய்யுங்கள்.

தன் பிள்ளைகளில் மூவரைப் போராட அனுப்பி, தானும் ஒரு போராளியாக வாழ்ந்து...... இவள் போன்ற அன்னையர்களினால்தான், எங்கள் தேசம் பெருமையுடன் நிமிர்ந்து நிற்கிறது!

— குரு ✻

## விடுதலைக்கு....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னுடைய கட்டிலின் அருகில் வந்திருந்த அவரை, வியப்புடனே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''அம்மா! உங்கட கையால நான் சாப்பிட்டிருக்கிறன்'' - அவர் சொன்னார்.

உண்மைதான். போராட்டத்தின் ஆரம்பநாட்களில், தலைவரை சிறீலங்கா காவல் படை கடுமையாகத் தேடிக்கொண்டிருந்தபோது-பலாலி படைத்தளத்தின் எல்லையோடு இருந்த பாழடைந்த ஒரு பாடசாலைக் கட்டிடத்தினுள் மறைந்து வாழ நேரிட்டபொழுது - அம்மாவின் மகன்களில் ஒருவர்தான் தலைவருக்கு உணவு, தண்ணீர் கொடுத்தார்.

இக்கட்டான காலப்பகுதிகளில், போராட்டப் பயிருக்குக் கவசமாக நின்று பேணி வளர்த்த தேசபக்தர்கள் அவர்கள்.

தனது வாழ்வில் மிகப்பெரிய மகிழ்ச்சியை, அம்மா அந்த நாளில் கண்டாள். தலைவர் வந்து தன்னைப் பார்த்துக் கதைத்துவிட்டுச் சென்ற அந்த நாளை, அவள் எப்போதுமே நினைவுகூர்ந்து பெருமைப்படுவாள்.

அக்காவின் வீட்டில்தான் அம்மா இப்போதும் இருக்கிறாள். அம்மாவுக்கு வயதாகிவிட்டது. கட்டிலில் இருப்பாள். அவளைப் பார்க்க - அவளுடன் கதைக்க -எமது தோழர்கள் எப்போதும் அங்கே போவார்கள். எங்களை அருகில் இருத்தி- அணைத்துக் கதைப்பாள். பெற்ற தாயின் அரவணைப்பை-பாசத்தை- நாங்கள் அதில் உணர்வோம்.

அந்த வீட்டில் எப்போதுமே புலிகளுக்காக அடுப்பு எரிந்து கொண்டிருக்கும். அங்கு போகின்ற எந்தப் போராளியும் ஏதாவது சாப்பிட்டே ஆகவேண்டும். இது அம்மாவின் கட்டளை.

அம்மா எங்களிடம் அடிக்கடி சொல்லுவாள்: ''நீங்கள் எல்லாரும் தான்ரா என்ர பிள்ளையள்''-அதில் ஒரு பெருமிதமும் திருப்தியும் இருக்கும்.

— பொபி ✻

## இவர்கள்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றன. இதன்மூலம் வாசிக்கும் ஆர்வம் அதிகரித்துள்ளதைக்காணக் கூடியதாக உள்ளது.

மேலும் வீதிகள், கிணறுகள், மலகூடங்கள் ஆகிய பொது வசதிகளை அமைப்பதில் மக்கள் ஒன்றுபட்டு உழைத்தனர்.

விடுதலைப் புலிகளின் சமூகபொருளாதார வளர்ச்சித் திட்டப் பிரிவின் வேலைத் திட்டங்கள், சிறீலங்கா அரசின் அடக்குமுறைக்கும் அழிவு நடவடிக்கைகளுக்கு நடுவிலும் எமது மக்கள் தலை நிமிர்ந்து வாழ, வழியமைத்துக் கொடுக்கின்றன.

வேதனை நிறைந்த அகதி முகாம் வாழ்க்கை மாற்றியமைக்கப்பட்டு, குடியிருப்புத் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டு, புதிய வாழ்க்கைக்குள் மக்கள் அடி எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இழப்புகளால் இந்த மக்கள் சோர்வடையவில்லை. உரம்பெற்று, உறுதியோடு இந்த மண்ணில் கால் பதித்து, நிமிர்ந்து நிற்கிறார்கள்; தமது தேசத்தின் மீட்புக்காக, அடுத்த சந்ததியினரது வாழ்வுக்காக, வாழவும் போராடவும் தயாராகி வருகிறார்கள். ✻

## ஒக்ரோபர் 26 முதல்

## நொவம்பர் 25 வரை

- ☐ 119 சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர்.
- ☐ 83 புலிவீரர்கள் வீரச்சாவைத் தழுவினர்.
- ☐ 129 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

16-11-1992 அன்று கொழும்பில், சிறீலங்காவின் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ, ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

08-11-1992 இல், மட்டக்களப்புப் பிராந்தியத்தில் பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்றைச் சிங்களப் படை ஆரம்பித்தது. ஆனால் இந்த நடவடிக்கை படுதோல்வியில் முடிந்தது. இந்த நடவடிக்கையின்போது 09-11-1992 அன்று, தமது உலங்குவானூர்தி ஒன்றைச் சிங்களப் படையினர் இழந்தனர்.

23-11-1992 அன்று, பலாலி இராணுவ விமான இறங்கு தளத்தின் கிழக்குப் பகுதியில் - இறங்கு தளத்தின் பாதுகாப்பிற்காக 4½ கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டிருந்த 150இற்கும் அதிகமான காவல் அரண்கள்மீது, தாக்குதல் நடாத்தப்பட்டது. இவ்வெற்றிகரமான நடவடிக்கையின்போது, அப்பகுதியில் நிலைகொண்டிருந்த சிறீலங்காப்படையினர் விரட்டியடிக்கப்பட்டதுடன், 50இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டு, 70 ஆயுதங்களும் ஒரு லட்சம் ரவைகளும், மேலும் வெடிப்பொருட்களும்படைத்தளபாடங்களும்கைப்பற்றப்பட்டன.

# ஈகம், வீரம்!

ஆணவ பலம் —

உலகை அடக்கி ஆளலாம் எனக் காட்டிநின்ற ஆதிக்க பலம், இப்போது விசாரணைக் கூண்டினுள் கூனித் தலை குனிந்து நின்றது.

இறந்த அதிகாரப் பிரமுகர், எதிரே இருந்த உயர் பீடத்தில் அமர்ந்திருந்தார்.

இது மண்ணுலகம் அல்ல!

இருள் சார்ந்தோர்க்குப் புகலிடம் கொடுக்கும் இன்னொரு உலகம்!

கனதி மங்கிய இருள். இவற்றின் நடுவே வீற்றிருந்த அதிகாரி தனது கம்மிய குரலில் கேட்டார் –

''நீயும் என்னுடன் கூடஇருந்தாய்தானே''?

''ஆம்'' எனத் தலை குனிந்தது பலம்.

''வேறு யார்''?

''புலனாய்வு, பாதுகாப்பு, படை வல்லமை என யாவும் சூழ்ந்து இருந்தன''.

''ஆமாம், எல்லாம் எம் முகாமில் இருந்தன; எல்லா வடிவிலும் இருந்தன, இல்லையா''?

அந்தக் கேள்வியில் கேலியுடன் விசனமும் தொனிக்கிறது!

மீண்டும் ஒரு கணம் மௌனம். அதில், நடந்த நிகழ்வுகள் நினைவில் எழுந்து மறைகின்றன.

உச்ச உயர் அதிகாரி என்ற வகையில் இவர் தமக்குரிய அறையில் இருக்கிறார். பக்கத்தில் மெய்ப்பாதுகாவலர். சூழவும் பூரண ஆதிக்க பலம், பாதுகாப்பு.

கவலையறியாத அகம்பாவ நிலை! சிந்தனை சிறகடிக்கிறது!

தமது கட்டளையின் பேரில் எழுந்த எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள்! அழிக்கப்பட்ட தமிழரின் குடிமனைகள், பறிக்கப்பட்ட உயிர்கள்! இவ்விதம் அந்த இனத்தை அழிக்கவே போகிறோம்......! வெல்லவே போகிறோம்!

இந்தப் பரவச நிலை ஒரு நொடியில் சிதறிய பயங்கர நினைவு எழுகிறது.

''என்ன நடந்தது'' என, உயர் பீடத்தில் இருந்தபடியே கேள்வி எழுப்புகிறார்.

''சொல்லுகிறேன் எசமான். அந்நிய உதவி, இறக்குமதி ஆயுதம், அதன் படைபலம் எனப் பல வடிவிலும் இருந்தோம். ஆனால்......''

''ஆனால் ......''?

''அந்த நள்ளிரவில் எம் கற்பனைக்கு எட்டாத இளம் தமிழன் ஒருவன், எமக்கு மின்னாத இடிபோல ஆகினான். முகாம் அதிர்ந்தது!

வாகனங்கள் எழுந்து வீழ்ந்தன.

எங்கும் தீச்சுவாலை, அவல உணர்வு.

புலிகளின் சீறல். நனைந்த நிலம்.

விரைந்தோடும் காலடிகள். கைவிடப்பட்ட ஆயுதங்கள்! இந்த அவலத்தின் நடுவே –

நீங்கள் துண்டமாய்க் கிடந்தீர்கள்''.

அதிகாரி தடுமாறியபடி ஒரு கேள்வியை எழுப்பினார்–

''அவன் கொண்டுவந்ததும் குண்டுதானே''?

''குண்டு மட்டும் அல்ல. அவன் வரிந்து வந்தது......''

''பயப்படாது சொல்''.

''ஒரு மாவீரனின் ஈகம், வீரம்''.

அதிகாரி மூர்ச்சித்து மெல்லென வீழ்ந்தார்; மீண்டும் இறந்தார்.

தூரத்தே–

மண்ணுலகில், ஒளியொன்று தெரிந்துகொண்டிருந்தது. அது, அடிமை வாழ்வை அகற்ற வந்த ஈழத் தமிழினத்தின் சுடர்; மாவீரரின் ஈகம்– வீரத்தால் ஏற்றப்பெற்ற அணையாத தீபம்!

— நாக. பத்மநாதன் ❋

# மாவீரரின் தியாகத்தில் ........

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது.

சமாதானத்தின் கதவுகளை இறுக மூடிவிட்டுப் போரை விரிவாக்கம் செய்வதில், எதிரி தீவிர அக்கறைகாட்டி வருகிறான். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு எந்த உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்க, அரசு தயாராக இல்லை.

இவ்வாண்டு, என்றுமில்லாத வகையில் யுத்தம் முனைப்புற்று உக்கிரமடைந்தது. எதிரியின் படையெடுப்புத் திட்டங்களை முறியடிக்கும் வகையில் நாம் புதிய போர்த் தந்திரோபாயங்களை வகுத்து, தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினோம். இதனால், என்றுமில்லாதவாறு எதிரி களத்தில் இரத்தம் சிந்தினான்; வரலாற்றில் நிகழாத பாரிய இழப்புகளைச் சந்தித்தான். ஆக்கிரமிப்பாளர்களின் சுவடுகளை இந்த மண் ஒருபொழுதும் சுமந்து கொள்ளாது என்பதை, எதிரிக்கு நாம் நன்கு உணர்த்திக் காட்டினோம்.

போர்முனையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட போதும், போரின் விளைவால் பொருளாதாரம் சீர்குலைந்த போதும், போரில் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என உணர்ந்துகொண்டபோதும், போர் அணுகுமுறையைக் கைவிட சிங்கள அரசு தயாராக இல்லை. ஆயுதப் படைகளைப் பலப்படுத்தி, ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தீவிரப்படுத்தி, இராணுவத் தீர்வை முன்னெடுப்பதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

இதிலிருந்து நாம் ஒன்றைத் தெட்டத்தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது, ஆயுத பலத்தால் தமிழினத்தை அடக்கி ஆளவேண்டுமென்ற சிங்கள – பௌத்தபேரினவாதத்தின் ஆதிக்க மனோநிலையில், சிறிதளவேனும் மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக் கிடக்கும் வரை, தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில்ஒரு நீதியான – நியாயமான – அரசியல் தீர்வை நாம் சிங்கள ஆளும்வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இந்தக் கசப்பான உண்மையை எமது மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

நீண்டதாக, மிகவும் கடினமானதாக, நெருக்கடிகளும் சோதனைகளும் நிறைந்ததாக, எமது விடுதலைப் பயணம் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கிறது. காந்திய மென்வழிப் போராட்டத்திலிருந்து ஆயுத எதிர்ப்பு இயக்கம்வரை, இத்தனை காலமாக எத்தனையோ வழிகளில் நீதி கேட்டு, நியாயம் கோரி நாம் எழுப்பிய உரிமைக்குரல், சிங்கள தேசத்தின் மனச்சாட்சியைத் தொட்டதாகத் தெரியவில்லை.

காலம் காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள், சாவும் அழிவுமாக 'அவர்கள் சந்தித்தஅனர்த்தங்கள், சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக் கண்ணீர் – இவை எல்லாம் பௌத்த தேசத்தின் காருண்ணியத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

எதிரி ஈவிரக்கமற்றவன்; போர்வெறி கொண்டவன்: எமது தாயகத்தைச் சிதைத்து, எமது இனத்தை அழித்துவிடுவதையே இலட்சியமாகக் கொண்டவன். அவனது இதயக் கதவுகள் திறந்து எமக்கு நீதி கிடைக்குமென, நாம் எதிர்பார்க்கமுடியாது.

இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது?

நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர, தொடர்ந்து எமது போராட்டத்தைத் தீவிரமாக்குவதைத் தவிர, எமக்கு வேறு வழி இல்லை.

நாம் வன்முறைமீது மோகங்கொண்ட போர் வெறியர்கள் அல்லர். நாம் உண்மையில், ஆன்மரீதியாக, சமாதானத்தையே விரும்புகிறோம். ஒரு நிரந்தரமான, நிம்மதியான, கௌரவமான சமாதானத்தையே விரும்புகிறோம். அதனால்தான் இந்தக் கொடூரமான போரின் மத்தியிலும், சமாதானத்தின் கதவுகளை நாம் திறந்து வைத்திருக்கிறோம். சமாதானத்தின் பாதையை நாம் மூடிவிடவில்லை; அப்படி மூடிவிடும் நோக்கமும் எமக்கில்லை. ஏனென்றால் சமாதானத்தை அடைவதற்காகவே நாம் போராடுகிறோம். என்றோ ஒரு நாள் எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளைத் தட்டுவானாக இருந்தால், நாம் எமது நேசக் கரங்களை நீட்டத் தயாராக இருக்கிறோம்.

ஆனால், எமது எதிரியோ வன்முறைமீது காதல்கொண்டவன். அதனால், அன்றிலிருந்து இன்றுவரை ஒரு அநியாயமான யுத்தத்தை எம்மீது திணித்து வருகிறான். இன்று எதிரியின் படையணிகள் எமது வாசல் வரைவந்து போர்முரசுகொட்டுகின்றன. எம்மை அழித்துவிடுவதற்கும் எமது மண்ணை விழுங்கிவிடுவதற்கும் கங்கணம் கட்டி நிற்கின்றன. இந்த இன அழிப்பு யுத்தத்திற்காக எந்த அளவிற்கும் இரத்தம் சிந்த, எதிரி தயாராக இருக்கிறான்.

இந்த இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? போராடி எமது மக்களையும், எமது மண்ணையும் பாதுகாத்துக்கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் உண்டா?

போராடித்தான் நாம் சுதந்திரத்தை நிலைநாட்டிக்கொள்ள வேண்டும். சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டம் அல்ல. அது இரத்தம் சிந்தி வென்றுகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

நாம் தொடர்ந்து போராடுவோம். எத்தனை இடர் வரினும், எத்தனை துயர் வரினும், நாம் எமது விடுதலை நோக்கிய பயணத்தைத் தொடருவோம். எமது மக்கள் சிந்திய இரத்தமும் எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண்போகாதிருக்க, நாம் உறுதி தளராது போராடுவோம். எமது இலட்சியப் பயணத்தில் எத்தனையோ சவால்களை, எத்தனையோ ஆபத்துக்களை, எந்தனையோ நெருக்கடிகளை நாம் சந்தித்துவிட்டோம். இனி எம்மை எதுவும், எவரும் அச்சுறுத்த முடியாது. நாம் துணிந்து போராடுவோம். வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கிறது; சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கிறது.

எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாய் நிற்கும் மாவீரர்களே!

உங்கள் இரத்தத்தால் எங்கள் விடுதலை வரலாறு மகத்துவம் பெறுகிறது.

உங்கள் இலட்சிய நெருப்பால் எங்கள் போராட்டம் புனிதம் பெறுகிறது.

உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது.

உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி, வைரம் பெறுகிறது.

எங்கள் தேச சுதந்திரத்தின் சிற்பிகளாகிய உங்களை, நாம் சிரந்தாழ்த்தி வணங்குகிறோம். ❋

'புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்'

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்